எல்லா மதத் தலைவர்களினதும் வாழ்க்கை வரலாறுகளை படித்துள்ள நான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்த பிறகு கண்ணீர் விட்டு அழுது விட்டேன்!

மகாத்மா காந்தி


صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල් MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை -20 ரூபா | 01 மே 2005 | 21 ரபீயுல் அவ்வல் 1426 | சுவடு- 60


மாதத்தில் மூன்று இதழ்கள் 1, 10, 20ம் திகதிகளில்...

# முஸ்லிம்களை ஏமாற்றுகிறது நோர்வே!

(நமது அரசியல் செய்தியாளர்)

**இலங்கை அரசியல் பேச்சுவார்த்தை அரங்கில் மத்தியஸ்தம் வகித்துவரும் நோர்வே, தனது அனுசரணைப்பணியின் ஊடாக, தொடர்ச்சியாக முஸ்லிம்களை ஏமாற்றி வருகிறது. இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் நடவடிக்கைகள் நோர்வேயின் கபடத்தனத்தை தெட்டத்தெளிவாக உறுதிப்படுத்தி உள்ளது.**



இலங்கை அரசாங்கத்திற்கும். புலிகளுக்குமிடையே பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் மிகத்தீவிர ஆர்வம் காட்டிவரும் நோர்வே. முஸ்லிம்களை ஏதோ ஒருவிதத்தில் தாஜா பண்ணி நிலைமைகளைக் கையாள்வதற்கு திட்டமிட்டு செயற்பட்டுவருகிறது. இலங்கைக்கு விஜயம் செய்தவுடன் நோர்வேப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் புத்தளத்தில் உள்ள வட மாகாண முஸ்லிம்களை சந்திப்பதற்கு ஓடோடிச் சென்றதும். அந்த மக்களின் துன்பங்களைக் கண்டு கண்ணீர்விட்டதும். அதே கையுடன் மட்டக்களப்பு. அம்பாரைப் பிராந்திய முஸ்லிம்களைச் சந்தித்து. பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் உள்வாங்கப்படுவார்கள் என வாக்குறுதி அளித்ததும் நோர்வேயின் இராஜதந்திர காய் நகர்த்தலின் ஓர் அம்சமாகும்!

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில். சர்வதேச சமூகம் தலையிட்டு. தமது பிரசன்னத்தையும் தமது நலன்களையும் பரந்தளவில் உறுதிப்படுத்தி உள்ள இத்தருணத்தில். தமது நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இலங்கை முஸ்லிம்களைப் பலியாக்குவதற்கு மேற்கு நாடுகள் இன்று தயாராகிவிட்டது. சொல்ஹெய்ம் இலங்கையில் தரித்து நிற்கும் போதே. இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலர் கிறிஸ்டினா ரொக்கா. கல்முனைக்குச் சென்று கடற்கோளினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களைச் சந்தித்ததும் ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல!

இலங்கையின் சமாதான முயற்சியில் மத்தியஸ்தராகப் பணி செய்து வரும் நோர்வேயின் சமாதானத் தூதுவரின் முகமூடிக்குப் பின்னால் அமெரிக்கா ஒளிந்து கொண்டிருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. பொதுக்கட்டமைப்பினை தீவிரமாக எதிர்த்துவரும் ஜே.வி.பி.யை வழிக்கு கொண்டு வருவதற்கே கிறிஸ்டினா ரொக்கா இலங்கை வந்தார் என்பதும். ஜே.வி.பி.க்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இந்த விஜயத்தின் ஊடாக ரொக்கா பல்வேறு செய்திகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் உலக நாடுகளை தனது இராணுவ வல்லாதிக்கத்தின் கீழ்



**இலங்கையின் சமாதான முயற்சியில் மத்தியஸ்தராகப் பணி செய்து வரும் நோர்வேயின் சமாதானத் தூதுவரின் முகமூடிக்குப் பின்னால் அமெரிக்கா ஒளிந்து கொண்டிருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல.**

சிறைப்படுத்துவதற்கான அமெரிக்காவின் அரசியல் ராஜதந்திரத்தில். இப்போது இலங்கையின் பொதுக்கட்டமைப்பு விவகாரம் கைவசப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2002ம் ஆண்டிலிருந்து பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்கள் பலி கொள்ளப்படமாட்டார்கள் என நோர்வே தரப்பு அளித்த பல்வேறு வாக்குறுதிகள் எதுவுமே காப்பாற்றப்படவில்லை என்பதும். நோர்வேயின் சமாதான மத்தியஸ்த முயற்சியில் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கமாட்டாது என்பதையும் முஸ்லிம்கள் நன்கு தெரிந்தே வைத்துள்ளனர். நோர்வேயின் மத்தியஸ்த வலைக்குள் வீழ்ந்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கூட தற்போது நோர்வேயின் செயற்பாடுகளை பகிரங்கமாக விமர்சிப்பதற்கு முன் வந்துள்ளது.

இன்று பேசுபொருளாகி உள்ள பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் பரிமாறப்படும் எந்த ஆவணத்தையாவது அல்லது அது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளிலாவது முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு காட்டவுமில்லை: கலந்து கொள்ள வாய்ப்பளிக்கவுமில்லை. ஆனால் முஸ்லிம்களுக்கு பொதுக்கட்டமைப்பில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென்று மட்டும் நோர்வே கிளிப்பிள்ளை போல் தொடர்ந்தும் சொல்லி வருகிறது.

கடந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பு விடயத்தை முஸ்லிம்கள் வலியுறுத்தியபோது. பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது என ரஊப் ஹக்கீமை அழைத்துச் சென்று உலகமெல்லாம் காட்டியது இந்த நோர்வே! ஆனால் காட்சிப்படுத்தப்பட்ட அந்த முஸ்லிம் பிரதிநிதித்துவத்தால் பேச்சுவார்த்தை மேசையில் சிரித்துக்கொண்டு போஸ் கொடுப்பதைத் தவிர வேறு ஒன்றுமே செய்ய முடியவில்லை. மீளவும் தற்போது பிரதிநிதித்துவம் என்ற போர்வையில் பொதுக்கட்டமைப்பு விடயத்திலும். தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் முஸ்லிம்களை ஏமாற்றுவதற்கு தயாராகிறது நோர்வே!

## அதாஉல்லா தலைமையிலான மாற்று அணி தோல்வி கண்டுவிட்டது!




**அமைச்சர் பதவி கடந்த அரசியல் முஸ்லிம்களுக்குத் தேவை!**

முன்னாள் எம்.பியும் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளருமான சகோதரர் ஹரிஸ் உடனான நேர்காணல்! 07

## புத்தள முஸ்லிம்கள் வாழ்வில் வடமாகாண முஸ்லிம்களின் இடப் பெயர்வு!

16



**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சமூக சமத்துவத்திற்கான குரல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கொழும்பு வைத்தியசாலையில் இரு நோயாளிகளின் ஆவணங்கள் மாறியதால், காலில் இருந்த காயத்தை சுத்தம் செய்ய சென்ற பெண்ணின் காலை துண்டாடி உள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எந்தவிதமான விமோசனத்திற்கும் வழிகோலாமல் வைத்தியசாலை நிர்வாகமும் சட்டமும் காலம் கடத்துவது கண்டிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.

பாதிக்கப்பட்ட பெண், 1 1/2 மாதங்கள் கடந்தும் இழைக்கப்பட்ட அநீதிக்கு சரியான தீர்வு இல்லாமல் நீதி கேட்டு நிற்கின்றார். இவர் மேலும் கூறியபோது; சித்தி நசீரா, 40 வயதுடைய நான் நீர்கொழும்பு பாண் கடை சந்தியில், மீரிகம சாலையில் 93/10ம் இலக்க வீட்டில் வசித்து வருகின்றேன். கடந்த பல வருடகாலமாக எனது கணவர் நோயாளியாக இருந்தபடியால் குடும்பத்தைப் பார்க்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. கடந்த 16 வருட காலமாக எனது குடும்பத்தை 'அடை' என்று சொல்லக்கூடிய பலகாரங்கள் செய்து கடைகடையாக வினியோகம் செய்து அதில் வரும் வருமானத்தில் எமது பசியை போக்கிக்கொண்டு வருகின்றோம். அண்மையில் எனது காலில் எதேர்ச்சையாக ஒரு புண் வரவே நான் ஒரு தனியார் வைத்தியசாலையை நாடினேன். எனது காலைப்பார்வையிட்ட வைத்தியர், எனது வறுமையையும், இயலாமையையும் புரிந்து கொண்டு நீர்கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு போகும் படி அறிவுரை கூறினார். அதன் அடிப்படையில் பெப்ரவரி 21ஆம் திகதி நான் நீர் கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு எனது காலை நன்கு பரிசோதித்த வைத்தியர்கள், பரிகாரமும் செய்தனர். அச்சமயம் என்னால் நன்கு நடக்க கூடியதாக இருந்தது. அதன் பிறகு வைத்தியர், என்னை சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி பரிகாரம் செய்யும் படியும், காயத்தை சுத்தம் செய்து கொண்டு வீடு போகலாம் எனவும் ஆலோசனை வழங்கினார். அதற்கமைய, மார்ச் 1ம் திகதி காலை என்னை சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு கொண்டு சென்றனர். எனக்குப் பக்கத்தில் இன்னுமொரு பெண்ணையும் அழைத்து வந்தனர். அப்பெண் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர் என அறிந்தேன். அத்தோடு கால் நீரிழிவு நோயினால் அகற்றப்பட உள்ளது எனவும் அவர் என்னிடம் சொன்னார். நிலமை இவ்வாறு இருக்கையில் எனது உணர்வுகள் யாவும் செயலிழக்கப்பட்டது.

எனக்கு மீண்டும் நினைவு திரும்பும் போது அங்கிருக்கும் வைத்தியர்கள் காலை சுத்தம் செய்ய வந்த நோயாளி யார் என பிரஸ்தாபப்படுவது எனக்கு நன்கு கேட்டது. எனக்கு நினைவு திரும்புவதை உணர்ந்த வைத்தியர், என்னிடம் நேரடியாகவே கேட்டார், நீங்கள் காலை சுத்தம் செய்ய வந்தவரா? காலை வெட்டவந்த நோயாளியா? பதிலுக்கு நான் காலை சுத்தம் செய்ய வந்த நோயாளி என பதில் கூறினேன். அச்சமயம் பேயறைந்தவர்களைப் போல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி எல்லோருமே வெளிறிப்போய் இருந்தனர். எனக்கு உடனே ஏதோ தவறு நடந்து விட்டது என எண்ணத் தோன்றியது. எனது காலை உற்று நோக்கினேன். ஐயோ எனது காலைக் காணவில்லை. நான் மிகவும் வருந்தி அழுதேன். என்ன செய்துவிட்டீர்கள்? கால் இன்றி நான் எப்படி வாழப்போகிறேன்? என் குடும்பத்தை யார் கவனிப்பர். இதை விட ஏதாவது விசத்தை தந்தாகிலும் என்னை கொன்று விடுங்கள் என அலறினேன். அப்போது வைத்தியர்கள் கூச்சல் போடாதீர்கள், சிறியதொரு தவறு நடந்து விட்டது எனக் கூறியதும் எனது வேதனை இரட்டிப்பாகியது. பின்பு சத்திர சிகிச்சை அறையில் என்னை வைத்துக்கொண்டு கிட்டத்தட்ட 4 அல்லது 5 மணித்தியாலங்களாக தங்களது தவறிலிருந்து தப்பிப்பதற்கு உபாயம் வகுத்துக் கொண்டிருந்தனர் என வைத்தியசாலையில் நடந்தவிடயத்தை அப்பெண் விபரித்துள்ளார்.



# வெட்ட வேண்டியவரின் காலை வைத்துவிட்டு, வேறொருவரின் காலை வெட்டிய பரிதாபம்!

நிசார் மௌலானா - மாளிகாவத்தை

பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவரான 50 வயதுடைய முகமட் யூசுப் இதுபற்றி குறிப்பிடுகையில் நிகழ்விற்கு பின்பு ஒரு விடயத்தை எங்களுக்கு விளங்கக்கூடியதாக இருந்தது. அதாவது நடந்தவைகளை மறைத்து, எனது மனைவியின் காலை வெட்டியதால்தான் அவர் உயிர் வாழ்கின்றார் என ஒரு கதையை சம்பந்தப்பட்டவர்கள் சோடித்துக்கொண்டிருக்கின்றனர். எங்களுக்கு வந்த இந்த நிலை எவருக்குமே வரக்கூடாது என அவர் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார். இவர்களின் இந்த பரிதாபமான நிலையை உணர்ந்து எமது சமூகத்தில் படித்தவர்கள், பண்புள்ளவர்கள் எவரேனும் இவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக முன் வருவார்களா? இழைக்கப்பட்ட அநீதிக்கு இவர்களுக்கு நஷ்டஈடு கிடைக்குமா?


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்!

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர, சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

பணத்தை காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசோலை அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication and Printers எனக் குறிப்பிடவும். காசுக் கட்டளையாக இருப்பின் Muslim Kural Publication and Printers, Wellampitiya என அவசியமாகக் குறிப்பிடவும்.

சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| 3 மாதங்கள் | - (12 இதழ்கள்) | 200/- |
| 6 மாதங்கள் | - (24 இதழ்கள்) | 400/- |
| 1 வருடம் | - (48 இதழ்கள்) | 800/- |

தொடர்புகளுக்கு:
119/15, Viviyan Gunawardena,
Mawatha (Kettampahuwa Road)
Wellampitiya.
Phone : 077 3131627

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)


## பத்திரிகை மீளவும் வெளிவருகிறது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்!



முஸ்லிம்களுக்கென்று ஒரு தனித்துவமான ஊடகத்தேவையை எம்சமூகம் வேண்டி நின்றபோது களத்தில் இறங்கிய எம்பத்திரிகை விறுவிறுப்பாக மக்களிடையே சென்றடைந்தும்; அவர்களால் வரவேற்கப் பெற்றதையும் எம்மால் மறக்கமுடியாது. முஸ்லிம்கள் மீது இனத்துவேசத்தை அள்ளிவீசுகின்ற பத்திரிகைகளுக்கு மத்தியில், எமது தனித்துவமான பத்திரிகையை கொண்டு செல்வது சிரம சாத்தியமான விடயம்தான். இதன்போது எம்போன்ற சமூகத்திற்காக உழைக்கின்ற பத்திரிகை ஸ்தாபனங்கள், நிதிப்பிரச்சினை, விற்பனை வீழ்ச்சி போன்ற இன்னோரன்ன விடயங்களை எதிர்நோக்குவது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் இவற்றுக்கு மத்தியில் தான் எமது பத்திரிகையை தியாக சிந்தனையோடும், காலத்தின் தேவை கருதியும் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பிலும், கடப்பாடுடனும் இருக்கிறோம். எனவே எமது பத்திரிகை வெளியாகுவதும், பிறகு இடைநிற்பதும் போன்ற நிலைமை இனிமேல் இல்லாது தொடராக வெளிவரவேண்டும். எமது முஸ்லிம்களின் தனித்துவமான ஊடகத்தேவையை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும்.

ஏ.எம்.பாயிஸ் - சாய்ந்தமருது - 04

# சொன்னார்கள்!

### பொய்க்கும் தேர்தல் வெற்றிக்கும் என்ன தொடர்பு?



பொய்யரான பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயரை தேர்தலில் தோல்வியடையச் செய்யுமாறு அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் பிரிட்டிஷ் வாக்காளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். - ரொய்ட்டர் ஏப்ரல்



### தெரிந்தவர்கள் பேசலாமே?

வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் அரசியலை அறியாதவர்கள் அவர்களுக்காகப் பேசுவது அதிகரித்து வருகிறது. இலுக்குச்சேனையில் சேகுஇஸ்ஸதீன் - தினகரன் ஏப்ரல் 26

### முஸ்லிம் அரசியல் குரல் ஜே.வி.பி.யா?



முஸ்லிம் மக்களின் அரசியல் இருப்பை உறுதி செய்யாத எந்தவொரு தீர்வையும் ஜே.வி.பி. ஏற்கமாட்டாது! மீலாத் விழாவில் அமைச்சர் விஜித ஹேரத் - தினகரன் ஏப்ரல் 23

### அதிபர்களுக்கு மட்டும்தானா?

ஊழலில் ஈடுபடும் அதிபர்கள் மீது கருணை காட்டப்படமாட்டாது. - டெய்லிநியூஸ் - ஏப்ரல் 28

### யார் பதற்றப்படுகிறார்கள்?



தேர்தல் வரப்போகிறது என மக்களைப் பதற்றப்படுத்தும் புதிய வியாதி மு.கா. தலைமைக்கு தோன்றியுள்ளது. அமைச்சர் அமீர் அலி - தினகரன் ஏப்ரல் 18



### பிரதமரின் நிலைமை!

பொதுக்கட்டமைப்பு என்றால் என்ன? இது விடயமாக இதுவரை பொறுப்புவாய்ந்த மட்டத்தில் யாரும் தெளிவுடன் பேசவில்லை. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - லங்காதீப ஏப்ரல் 28

### மக்களின் கவலைக்கு பதில் என்ன?

வடக்கு கிழக்கு மக்களின் ஜனநாயகம் பற்றிய கவலை ஜே.வி.பி.க்கு தேவையில்லாத விவகாரம் - அரியனேந்திரன் எம்.பி. - தினக்குரல் ஏப்ரல் 28

### அத்வானி எப்போது அரசியல் வாதி இல்லாமலானார்?



அரசியல்வாதிகள் அதிகார தாகத்தில் அலைகின்றனர் சந்தர்ப்பவாதமே அரசியல் தந்திரமாக மாறிவிட்டது. அத்வானி- ஹிந்து ஏப்ரல்



### சபாஷ்! அருமையான கண்டுபிடிப்பு!

மக்கள் விடுதலை முன்னணிக்கே அரசியல் வழிகாட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான். பசீர் சேகுதாவூத் - தினகரன் ஏப்ரல் 19

### எதிர்பார்ப்புகள் பலிக்குமா?



ஜே.வி.பி. யின் கெடுபிடிகளால் அரசு கவிழலாம் அல்லது பொதுத் தேர்தல் வரலாம்! ஜீ.எல்.பீரிஸ் - சுடர் ஒளி ஏப்ரல் 22



அரசுக்கும் புலிகளுக்குமிடையே கடற்கோள் நிவாரணம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதன் மூலமாகவே புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவர முடியும்! அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளர் கிரிஸ்டினா ரொக்கா - வீரகேசரி ஏப்ரல் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கட்டமைப்பும் முஸ்லிம்களும்!






பையூஸ் அகமட்

யதார்த்தமான நிலைமைகளைப் பேசுவதற்கும். அவைபற்றிய 'ஆழமான சமூக அக்கறையுடன் விமர்சனங்களை முன் வைப்பதற்குமான திறந்தவொரு கருத்துரையாடல் சூழலை முஸ்லிம் சமூக அகத்தினுள் ஏற்படுத்த வேண்டிய தேவை வரலாற்றில் இப்போது அதிகம் உணரப்படுகிறது. நீ இந்தக் கட்சி, நான் அந்தக் கட்சியென குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் நமது அரசியல் காலத்தின் விளைவு. தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்களின் தெளிவானதும் உறுதியானதுமான நிலைப்பாட்டினை முன்வைக்க முடியாத நிலையை முஸ்லிம்களுக்குள் தோற்றுவித்துள்ளது.

நமது அரசியல் உரிமையை இன்னொரு சமூகத்தின் அரசியல் தீர்வுடன் (குறிப்பாக தமிழர் சமூகத்துடன்) தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டிய அவசியத்திலும். அதன் நெருக்கடிக்குள்ளும் நாமுள்ளோம் என்பது உண்மையானது! ஆனால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் போதுதான். அல்லது அதற்கான எத்தனங்கள் நடைபெறும் போதுதான். முஸ்லிம்களும் தமது கோரிக்கைகளை முன் வைக்கப்பழகிப்போய்விட்டார்கள்! முஸ்லிம்களுக்கு முதலில் என்ன வேண்டும்? அதனைப்பெறுவதற்கு முஸ்லிம்கள் எத்தகைய வழிமுறைகளை வைத்திருக்கின்றனர்? அதனை அடைவதற்காக முஸ்லிம் சமூகம் பங்களித்து வருகின்ற தியாக உணர்வுகள். அதன் செயற்பாடுகள் என்ன என்கிற விடயத்தில் நாம் மிகத் தெளிவாக இருத்தல் வேண்டும்! இத்தகைய வழிமுறைகள். புரிதல்கள் முஸ்லிம் சமூகத்துக்குள் இல்லாததால்தான் எந்நேரத்திலும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லோராலும் கைவிடப்படுபவர்களாக முஸ்லிம்கள் உள்ளனர்.

உதாரணமாக இடைக்கால சபை என்கிற விடயத்தை. தமிழர் தரப்பு முன்வைத்த போது. முஸ்லிம்களும் தமக்கு தனியான இடைக்கால சபை வேண்டுமென்றார்கள். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் தமிழர் தரப்பு பொதுக்கட்டமைப்பு கேட்கின்ற போது தமக்கும் தனியான பொதுக்கட்டமைப்பு வேண்டுமென்கிறார்கள். நாம் ஏன் இடைக்கால சபைக் கோரிக்கையை கைவிட்டு தமிழர் தரப்பின் கோரிக்கையின் பின்னால் பொதுக்கட்டமைப்புக்கு ஓடோடி வருகிறோம்? இதற்கான விளக்கம் என்ன என்பது தொடர்பில் முஸ்லிம்களுக்குள் அதிகம் பேசவேண்டி உள்ளது.

இந்த நாட்டிலுள்ள சிங்கள மேலாதிக்கவாத அரசியலுடன் முஸ்லிம்களுக்கு எந்தப் பகை முரண்பாடும் இல்லையா? சிங்கள மேலாதிக்கவாதத்தையும் அடக்கு முறைகளையும் நாம் எமது மக்களை ஒடுக்கும் செயற்பாடுகளாகப் பார்க்கவில்லையா? நேற்றைய மாவனல்லைக்கும் இன்றைய பொத்துவில் ஆக்கிரமிப்புக்கும் நமது பதில்தான் என்ன?

சுதந்திரத்தின் பின்னரான இலங்கை சமூகங்கள் தொடர்பான ஆய்வுகளில். சிங்கள மேலாதிக்கத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவர்களாக முஸ்லிம்கள் உள்ளனர் என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. சிங்களக் குடியேற்றம். மொழிக் கொள்கை, கல்வி. தொழில் வாய்ப்பு வளப்பங்கீடுகளில் மோசமான புறக்கணிப்பு. கலாசார உரிமைகளைப் பேணுவதற்கான தடை. தேசியப் பிரஜைகளாக சிங்களவர்களுடன் சமத்துவமாக நடாத்தப்படாதது போன்றவைகள் இதுவரைத் தீர்க்கப்படாத போது. சிங்கள மேலாதிக்கத்துடன் சமரசம் செய்து கொண்டு. அவை பற்றி கண்டும் காணாதும் இருந்து கொண்டு. தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் தருணங்களில் மாத்திரம். ஏன் நாம் பேசவிளைகிறோம் என்பது தொடர்பாக தமிழர் தரப்பு எழுப்பும் நியாயமான கேள்விகளுக்கு முஸ்லிம்கள் முதலில் பதிலளிக்கவேண்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழர் தரப்பு தமது அபிலாசைகளை முன்வைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும். முஸ்லிம்களும் பேசவெளிக்கிடுகின்றனர். அது ஓய்ந்த தருணத்தில் முஸ்லிம்கள் தமது அரசியல் உணர்வுகளுக்கு மூட்டைகட்டி முடிச்சுப் போட்டுவைத்து விடுகின்றனர்!

இத்தகையான நிலைமையானது தமிழர் தரப்புக்கு எதிரான சமூகமாக முஸ்லிம்களை நிலைப்படுத்தி வருகிறது. இத்தகைய போக்கு தொடர்ந்தும் நீடிப்பது ஆரோக்கியமானதல்ல! இந்த நாட்டு முஸ்லிம்கள் ஒரே தருணத்தில் சிங்கள மேலாதிக்கத்தாலும் தமிழ் மேலாதிக்கத்தாலும் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இப்போது பொதுக்கட்டமைப்பு விடயம் அரசியல் அரங்கில் சூடு பிடித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி பிலியந்தலையில் உரையாற்றும் போது. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படக்கூடிய பொதுக்கட்டமைப்பை யார் எதிர்த்தாலும் உருவாக்கியே தீருவேன் என சூளுரைத்துள்ளார். இதனை வழங்க முடியாது விட்டால் சமாதானம் பற்றிப் பேசுவதற்கு நாம் அருகதையற்றவர்களாகி விடுவோம் எனவும் தெரிவித்துள்ளார். உண்மையில் சமாதானம் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதற்கு ஆகக் குறைந்தது இந்தப் பொதுக்கட்டமைப்பு கோரிக்கையை அமுல்படுத்த வேண்டிய நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டுள்ளார். இதுதான் இன்றைய யதார்த்தம்.

இந்த விடயத்தை முஸ்லிம்கள் புரிந்து கொள்ளவேண்டும்! எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை மிக நியாயமாக. இலங்கையின் சிங்களத் தேசத்துடன் சமத்துவமாக வழிநடத்தப்படக்கூடிய வகையில் தீர்க்கப்படவேண்டும்! இதுவே எமது நிலைப்பாடு. அதேபோல் முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும். சிங்களத் தேசத்துடனும், தமிழ் தேசத்துடனும் முஸ்லிம் தேசமும் சமத்துவமாக அணுகப்படல் வேண்டும்! இந்நிலையில். முஸ்லிம்கள் தாம் இலங்கை அரசியலில் சமத்துவமாக நடத்தப்படுவதற்கான அரசியல் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அத்தகைய பணிகளை முன்னெடுக்காது. காலத்திற்கு காலம் வெறும் கதைகளைப் பேசுவதால் எந்தப்பயனும் இல்லை.




வன்னி புனர்வாழ்வு அமைச்சராக உள்ள ரிசாட் பதியுதீன் இப்போது வடமாகாண முஸ்லிம்கள் விடயத்தில் தீவிரமாக பணியாற்றி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஊடகங்களைப் பார்க்கும் போது நமக்கும் இதில் உண்மை இருப்பதாகவேபடுகிறது. அண்மையில் அவர் முன்னெடுத்து வருகின்ற பல்வேறு விடயங்களில் மூன்று முக்கிய விடயங்கள் முக்கியத்துவமுடையதாக உள்ளன.

01. வன்னிப்பிரதேசத்தில் கொண்டாடப்படவுள்ள தேசிய மீலாத் விழா!
02. வடக்கு முஸ்லிம்களின் துயர்களை அறிவதற்கான ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டுமென்ற அவரது கோரிக்கை. 03. வடபகுதி முஸ்லிம்களை தமது சொந்த தாயகத்தில் மீளக்குடியேற்றுவதற்கான முயற்சி. இம்மூன்று விடயங்களும். அவர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினை என்றாலும் முழுமொத்த முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாக உள்ளன.

முதலாவது விடயமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தின விழாவையொட்டி வருடா வருடம் இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் நடாத்தப்பட்டுவரும் தேசிய மீலாத் விழாவை வன்னி மாவட்டத்தில் நடாத்துவதற்கு அவர் பகீரத முயற்சி எடுத்து. அதில் பெற்ற வெற்றி முக்கியமானதாகும்.

வடபகுதியிலிருந்து முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அந்த மக்கள் மத்தியில் தேசிய அளவில் கொண்டாடப்படும் முதல் விழாவாக உள்ளதாலும். இவ்விழாவை கொண்டாடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பௌதீக உதவிகளை நிறைவேற்ற முடியுமாக இருப்பதாலும் அவரின் இந்த முயற்சி முக்கியத்துவமுடையதாகிறது.

> **1990ம் ஆண்டு வடக்கிலிருந்து இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை ஒரு ஆணைக்குழுவை நியமிக்கவும் இல்லை. அப்படியொரு முயற்சி செய்யப்படவுமில்லை. இதற்கான கோரிக்கையை ஜனாதிபதியிடம் தான் முன்வைத்துள்ளதாக ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

வடக்கில் மீலாத் விழா நடைபெறுவது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்ட கருத்து என்னை அதிகம் ஈர்த்தது. ஒதுக்கப்படும் நிதியில் அப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கும் கணிசமான அபிவிருத்தி உதவிகளை குறிப்பாக மின்சாரம். பாதை வசதிகளை தான் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார். உண்மையில் நாயகம் (ஸல்) அவர்களை நினைவு கூர்வதன் பொருத்தப்பாடு இப்படிச்செய்வதன் மூலமே இஸ்லாத்தினதும். நபிகள் நாயகத்தினதும் உன்னதங்களை செயற்பாடுகளால் நிரூபிக்க முடியும்.

இரண்டாவது விடயத்தில் இதுவரை யாருமே அரச தரப்பிலிருந்து பேசாத விடயத்தை ரிசாட் பதியுதீன் பேசிஉள்ளார். வடபகுதி முஸ்லிம்களின் இதுவரையான துயரத்தில் அக்கறை கொண்டோருக்கு ரிசாட் பதியுதீனின் கோரிக்கை நெஞ்சில் பால் வார்த்திருக்கும். இக்கோரிக்கை அரசியல் முக்கியத்துவமுடைய ஒரு கோரிக்கையுமாகும். 1990ம் ஆண்டு வடக்கிலிருந்து இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை ஒரு ஆணைக்குழுவை நியமிக்கவும் இல்லை. அப்படியொரு முயற்சி செய்யப்படவுமில்லை. இதற்கான கோரிக்கையை ஜனாதிபதியிடம் தான் முன்வைத்துள்ளதாக ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். ஆனாலும் ரிசாட் பதியுதீனின் கோரிக்கைக்கு ஜனாதிபதி என்ன பதில் அளித்தார் என்பது பற்றி எமக்குத் தெரியாது. இக்கோரிக்கை ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்டதன் பின் அத்தகைய விசாரணைக்குழு அமைக்கப்படுவதற்கு அவர் என்ன முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றார்? அவர்தான் பதில் சொல்லவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை இந்த ஆணைக்குழு அமைக்கப்படுவதும். அதன் அறிக்கை வெளிவருவதும். அவசியத்திலும் அவசியமாகும். இந்த ஆணைக்குழு அறிக்கை. வடபகுதி முஸ்லிம்கள் அங்கு வாழப்பிடிக்காது. கொழும்பிலும். புத்தளத்திலும் வசதியாக வாழலாம் என வந்தவர்கள் என ஒருபோதுமே செல்லாது. வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பில் இக்கோரிக்கை மிக முக்கியத்துவமுடையதாகும். வெறும் அரசியல்வாதியின் மேடைப்பேச்சாக இது அமைந்துவிடக்கூடாது! நமது மக்களின் எதிர்பார்ப்புகளை ரிசாட் பதியுதீன் காப்பாற்ற வேண்டும்!



மூன்றாவது விடயமாக, வடக்கு முஸ்லிம்கள் மீள் குடியேற விருப்பமாக உள்ளதாகவும் பிரபாகரனின் பதிலுக்கு காத்திருப்பதாகவும். தான் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது ஒரு துன்பவியல் நிகழ்வு என்று பிரபாகரனும் அன்ரன் பாலசிங்கமும் சர்வதேச ஊடகங்களுக்கு முன் தோன்றி சொல்லி மூன்று வருடங்களை எட்டிவிட்டது. ஆனாலும் வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் என்பது இன்று இம் மக்கள் மத்தியில் இதுவரை இருந்த நம்பிக்கையையும் தகர்த்துவிட்டிருக்கின்றது. வடக்கு முஸ்லிம்களின் குடியேற்றத்திற்கு புலிகள் பெரும் தடையாகவே இருந்து வருகின்றனர். (கணிசமாக மறைமுகமான வழிகளில்)

இந்த விடயத்தில் புலித் தலைமையை நெருக்க வேண்டியதும். புலித்தலைமையின் உண்மையான முகத்தை அம்பலத்திற்கு கொண்டுவருவதும் வடக்கு முஸ்லிம்களின் பிரதிநிதி என்ற வகையில் இன்று ரிசாட் பதியுதீனின் கடமையாகியுள்ளது. ரிசாட் பதியுதீன் எழுதிய கடிதத்திற்கு பிரபாகரன் என்ன பதிலை அளிக்கவுள்ளார் என முழு முஸ்லிம் சமூகமும் எதிர்பார்த்திருக்கிறது. அந்தப் பதிலை தெளிவாகப் பெறவேண்டியும் உள்ளது. இனியும் புலிகள் சர்வதேச சமூகத்திற்கு முன் ஒரு முகத்தையும் உள்ளூர் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு முகத்தையும் காட்டுவதற்கு நாம் வாய்ப்பளிக்க முடியாதல்லவா? நல்ல முயற்சிகளை பாராட்டுவதும் நமது மக்களுக்காகப் பேசுவதை ஊக்குவிப்பதும் நமது அனைவரினதும் கடமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல் போராட்டம்

## ஒரு வரலாற்றுத் தொடர்

**சி. புஷ்பராஜா எழுதுவது...**

> இத்தொடர் தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான பதிவாகும்; தமிழர் அரசியல் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்களையும் அதன் அரசியல் போக்கையும் நமக்கு மிகத் தெளிவாக முன்வைக்கிறது.
>
> தமிழர் அரசியலில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின் பாத்திரமும் அவர்களின் பங்களிப்பு பலம் பலவீனங்களுக்கு ஊடாகவும்; தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தையும் நாம் அறிந்துகொள்ள இத்தொடர் நமக்கு அதிகளவில் துணைபுரியும்!
>
> தமிழர் மிதவாத அரசியல் தலைமைகள் செய்த வரலாற்று பாத்திரத்தையாவது நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யவில்லை என்பதை இத்தொடர் வாசித்தறியும் போது நாம் கண்டுகொள்ளலாம்!

நான் எதிர்பார்த்ததுபோல், இரண்டாவது கூட்டத்துக்கு வரதராஜப் பெருமாள் வந்திருந்தார். தமிழ் இளைஞர் பேரவைக்கென முதன்முதலாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக் குழுவில் என்னுடன் க.பத்மநாபா, இ.தவராஜா, கி.பிரான்சிஸ், அ.வரதராஜப்பெருமாள், எம்.போல்பிள்ளை ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதுதான் அகில இலங்கைக்குமான தமிழ் இளைஞர் பேரவையின் தலைமையாகும். தமிழ் இளைஞர் பேரவை எந்தக் கட்சிக்கும் கட்டுப்படாத அமைப்பாக இருக்கவேண்டும், தனியான சுதந்திரமான அமைப்பாக இருக்கவேண்டும் எனும் முடிவில் தமிழர் கூட்டணியைச் சார்ந்த இளைஞர்களுக்குத் திருப்தி இல்லை என்பதையும், பெரும்பான்மையினரின் முடிவுக்கு அவர்கள் உடன்பட்டனர் என்பதையும் கூட்டமுடிவில் சந்ததியார், உமா மகேஸ்வரன், இறைகுமாரன் போன்றோர் என்னுடன் பேசிக்கொண்டதிலிருந்து புரிந்துகொண்டேன். ஆனால் அப்படியொரு முடிவு எடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் அன்றைய மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படியொரு முடிவைத் தமிழர் கூட்டணியினரின் காரியாலயத்தில் இருந்துதான் எடுத்தோம் என்பதும்,



அக்காரியாலயத்தின் ஒரு பகுதியைத்தான் தமிழ் இளைஞர் பேரவையின் காரியாலயமாகப் பயன்படுத்தினோம் என்பதும் ஒரு வேடிக்கையான கதை. ஆனாலும் தவிர்க்கமுடியாத யதார்த்தமும் அதுவே.

தமிழ் இளைஞர் பேரவையின் வளர்ச்சியில் இலைமறை காயாக பெரும்பங்கு கொண்டவர்களில் தாடிக்குணம் (குனரத்தினம்), கொழும்புத்துறை யோகேஸ்வரன், சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் துரைசிங்கம், கொக்குவில் அம்பிகைபாலன், உடுவில் பட்டினசபைத் தலைவர் முத்துலிங்கம், ஆவரங்கால் சின்னத்துரை, கச்சாய் தேவதாஸ், வடக்குப்புன்னாலைக் கட்டுவான் ஜோதிலிங்கம், கொழும்புத்துறை தியாகராசா, கரவெட்டி வீரபாகு, பொன்னையா சண்முகநாதன் (மணி), உரும்பிராய் சேகரம், அருந்தவராஜா, யாழ்ப்பாணம் குட்லக் ஹோட்டல்காரர்கள், உடுப்பிட்டி வீரபாகு, வல்வெட்டித்துறை கணேஸ், வல்வெட்டித்துறை கணபதிப்பிள்ளை, காரைநகர் செல்வம், மயிலிட்டி தங்கவேல் ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். மற்றையவர்களின் பெயர்கள் எங்கேயாவது தவறவிடப்பட்டிருப்பின் அவர்களையும் இங்கே நினைவு கூர்கிறேன்.

உற்சாகமூட்டிய சிவகுமாரன்

தமிழ் இளைஞர் பேரவை தொடங்கியபின் இலங்கைக் குடியரசின் முதலாவது ஆண்டு நிறைவன்று (22.05.1973) எம்மால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எங்கும் நடாத்தப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கை; நாம் எதிர்பாராத அளவுக்கு வெற்றியை ஈட்டித் தந்தது. இதில் மாணவிகள், மாணவர்கள், வர்த்தகர்கள் காட்டிய ஒத்துழைப்பு வரலாற்றில் பதியப்பட வேண்டியது. வி.தர்மலிங்கத்தின் காரில் எங்கும் சென்று நிலைமைகளைப் பார்த்தேன். வடமாகாணமே அந்த ஒரு நாள் மரணித்திருந்ததை எனது கண்களாலேயே கண்டேன்.

அடுத்து எமது போராட்டமாக; அரசுக்கு எதிராக வாய்களையும் கைகளையும் கறுப்புத்துணியால் கட்டி மௌன ஊர்வலம் நடத்துவது எனத் தீர்மானித்தோம். மருதனாமடம் சந்தியில் இருந்து ஊர்வலம் ஆரம்பித்து யாழ் கோட்டை மைதானத்தைச் சென்றடைவது என்றும்; பின்பு அங்கு பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவது என்றும் திட்டமிட்டோம். தமிழ் இளைஞர் பேரவையின் தலைமைக்குழுவில் இருந்த ஒற்றுமை (கொடியேற்றுவது சம்பந்தமாக எழுந்த பிரச்சினையைத் தவிர-அதை உண்ணாவிரதம் என்னும் தலைப்பில் எழுதியுள்ளேன்). முன்போ பின்போ எந்த அமைப்பிலும் இருந்திருக்கமாட்டாது. எங்களிடம் கருத்தொற்றுமை, விட்டுக் கொடுக்கும் பண்பு, புரிந்துணர்வுடன் நடந்து கொண்ட பாங்கு, எதற்கும் துணிவுடன் முன்செல்லும் தன்மை என்பன இறுதிவரை இருந்தது. இக்குழுவில் இருந்தவர்கள் கடைசி வரை இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட புரட்சி வழிகளில் போராட்ட உணர்வுகளை ஊட்டினர் என்பதை வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்தவர்கள் புரிந்துகொள்வர். இறுதியில் தமிழர் கூட்டணியினருடன் முரண்பட்டுக்கொண்டு தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து வெளியேறும்வரை இக்குழுவில் ஒற்றுமையுடனும் தோழமையுடனுமேயே இருந்தோம்.

(தொடரும்...)

# கடற்கோள் அனர்த்தமும் கைவிடப்பட்ட முஸ்லிம்களும்!

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அகதிகளாயுள்ள முஸ்லிம் மக்களை அரசியல்வாதிகள் கைவிட்டுவிட்டனர். அனர்த்தம் நடந்து 4 மாதங்கள் கடந்தும் இன்று வரையும் எந்த அரசியல் கட்சியோ, எந்த அரசியல் வாதியோ பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களைக் குடியமர்த்துவதற்கு உருப்படியான எந்த திட்டத்தையும் அரசிடம் முன் வைத்ததாகத் தெரியவில்லை.



கிழக்கு மாகாணத்தில் அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்ற போதிலும் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காமல் இருப்பது துரதிஷ்டமே! தேர்தல் காலங்களில் மக்களைத் தேடுகின்ற அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்ட மக்கள் அநாதைகளாகி அவலங்களோடு அகதி முகாம்களில் இன்னல்படுவதை கண்டும்காணாமல் இருப்பது கவலைக்குரியதாகும். பொது ஸ்தாபனங்கள், தனிநபர்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மேற்கொள்கின்ற பணிகளில் மூக்கை நுழைத்து தங்களின் அரசியலைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த அரசியல்வாதிகள் அலைந்து திரிகின்றனர்.

தேர்தல் காலங்களில் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்கின்ற அரசியல்வாதிகள் சுனாமியால் உயிரிழந்து உடமைகளை இழந்து யாருமற்ற அநாதைகளாக அகதி முகாம்களில் பொது அமைப்புக்கள், தனிமனிதர்களால் வழங்கப்படுகின்ற உணவு மற்றும் உடைகளோடு எந்தவித வசதிவாய்ப்புகளுமின்றி வாடுகின்ற மக்களுக்கு அரசியல்வாதிகள் தங்களது சொந்த நிதியில் உதவாமல் இருப்பது வேதனையளிக்கிறது.

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்மாகாணத்தில்; அங்குள்ள சிங்கள அரசியல்வாதிகள் ஸ்தலத்திலே நின்று ஆற்றுகின்ற பணியில் அணுவளவேனும் அம்பாரை மாவட்டத்தில் அரசியலிலே ஈடுபடுகின்ற முஸ்லிம் அரசியல் வாதிகளால் செய்ய முடியாமல் போனதேன் என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

> தேர்தல் காலங்களில் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்கின்ற அரசியல்வாதிகள் சுனாமியால் உயிரிழந்து உடமைகளை இழந்து யாருமற்ற அநாதைகளாக அகதி முகாம்களில் வாடுகின்ற மக்களுக்கு அரசியல்வாதிகள் தங்களது சொந்த நிதியில் உதவாமல் இருப்பது வேதனையளிக்கிறது.

தென்மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உடனடியாக இடிபாடுகள் அகற்றப்பட்டு துரித கதியில் புனர்நிர்மாணப்பணிகளும் மீள்குடியேற்றத்திட்டங்களும் நடைபெற்று வருவதோடு; பாதிக்கப்பட்ட மக்களுக்கான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் அங்குள்ள சிங்கள அரசியல்வாதிகள் தீவிரமாக அக்கறைகாட்டி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதற்கும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் உலக நாடுகள் பெருந்தொகையான நிதி உதவிகளை வழங்கியிருக்கின்றபோதிலும்; அவை எதுவும் அம்பாரை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு சேர்ந்திருப்பதாக அறியமுடியவில்லை.

இந்த நிலையில் முஸ்லிம் தலைமைகளுக்கிடையே போட்டாபோட்டியும், பதவிப் பகிர்வில் முரண்பாடுகளும் தொடர்கின்றன. ஆளும் கட்சியிலே இருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி எம்.பிக்கள் எல்லோரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம. அஷ்ரப் உயிரோடு இருந்திருந்தால் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்குக் கிழக்கு தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களுக்கு எந்தளவில் இவர் பங்களிப்பு வழங்கியிருப்பார் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது.

அதேபோன்று அழிந்து போயுள்ள பிரதேசங்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டிருக்கும். அந்த அரசியல் ஞானியின் இடத்தை எந்த அரசியல்வாதியாலும் இன்று வரை பூரணப்படுத்தப்பட முடியாமல் போய்விட்டது. இன்று முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கியிருக்கின்ற பாரிய பிரச்சினை ஆழிப்பேரலை அனர்த்தப் பிரச்சினையாகும். பாதிக்கப்பட்ட பெருந்தொகையான முஸ்லிம் மக்களுக்கான நிரந்தர வாழ்விடங்கள் அமைப்பதில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் போராடமாட்டார்களா என்ற ஆதங்கத்தில் முஸ்லிம் மக்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு யார் குரல் கொடுக்கப்போகிறார்கள்? தேர்தல் ஒன்று வரும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் மக்கள் மத்தியில் முஸ்லிம் தலைமைகள் எதைச் சொல்லி வாக்குக் கேட்கப் போகிறார்கள்? மக்கள் என்ன தீர்ப்பு வழங்கப் போகிறார்கள் என்பதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும்.


**பி.எம்.எம்.ஏ.காதர்**
**மருதமுனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதப் பொறிக்குள் பொத்துவில் முஸ்லிம்கள்!

பொத்துவில் பிரதேச முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வாழ்விடங்களும், வயல் நிலங்களும் பறி போய்விடக்கூடாது என்பதற்காகவே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கடந்த 07.04.2005 அன்று பொத்துவில் பிரதான வீதியில் அமைந்துள்ள புத்தர் சிலைக் கூடத்திற்கு குண்டு வைத்து தகர்க்க முற்பட்டதாக முஸ்லிம்கள் மீது அபாண்டம் சுமத்தப்பட்டது. ஆனால் அந்த சிலையினை அப்போதிருந்தே பாதுகாத்து வந்ததில் முஸ்லிம்களுக்கு பெரும்பங்குண்டு என்பதுதான் உண்மை. ஆனால், இவைகளை மறந்து சிங்கள மக்கள் மத்தியில் இப்படியான தவறான பிரச்சாரங்களை இன்று முன்வைப்பதில் சிங்கள இனவாதிகளும் சிங்கள ஊடகங்களும் பெரும் பங்காற்றுகின்றன.



1970 களில் தொடங்கப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சி நடவடிக்கையின் பின்: பொத்துவிலில் சிங்கள குடியேற்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அவை பரந்தளவில் சாத்தியப்படவில்லை. ஆனால் இன்று ஜாதிக ஹெல உருமய, ஜேவிபி போன்ற சிங்களத் தேசியக் கட்சிகள் அதிகாரத்திற்கு வந்ததன் பின்: மீளவும் சிங்கள குடியேற்றத்தை தொடர்வதில் அதிக சிரத்தை எடுத்து வருகிறது.

மதத்தின் பெயரால் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் சிலைகளை நிறுவி, இனத்தின் பெயரால் சிங்களவர்களை குடியேற்றி, உரிமையின் பெயர் சொல்லி முஸ்லிம்களை வெளியேற்றும் இம் மாபெரும் சதித்திட்டம் முஸ்லிம்களால் நடத்தப்பட்ட பேரணி மூலம் வெளிச்சம் போட்டுக்காட்டப்பட்டதன் விளைவே கடந்த 12.04.2005ல் ஹெல உருமய கொழும்பில் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாகும்.

பொத்துவில் முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்றும், புத்தசமயத்திற்கு எதிரானவர்களென்றும் சிங்கள மக்களுக்கு தவறாக இனங்காட்டி இலங்கையில் பௌத்தர்கள், இஸ்லாமியர்களுக்கிடையில் மதக்கலவரம் ஒன்றை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட ஹெல உருமய முயற்சிக்கிறது என்பது உண்மை. ஏனெனில், பொத்துவில் முஸ்லிம்களோ, பிறமுஸ்லிம்களோ சிங்களவர்களுக்கோ, பௌத்த மதத்திற்கோ எதிரானவர்களல்லர். என்றுமே எதிராக நடந்தவர்களுமல்லர். சேதி என்னவென்றால் பொத்துவில் முஸ்லிம்கள் புத்தர் சிலை அமைப்பதை எதிர்க்கவில்லை. மாறாக சிலைகள் நிறுவுவதை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தையே எதிர்க்கிறார்கள் என்பதுதான் உண்மை.

முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வாழ்விடங்களும், வயல் நிலங்களும் பறிபோய்விடக் கூடாது என்ற அடிப்படையில் தான் பொத்துவில் முஸ்லிம்கள் நடாத்திய நியாயபூர்வமான போராட்டம் என்பதை, சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்துவதில் முஸ்லிம் அரசியல் வாதிகளும், வெகுசன தொடர்பு சாதனங்களும் தவறிவிட்டன என்பதாக நாம் கருதுகிறோம்.

> **1970 களில் தொடங்கப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சி நடவடிக்கையின் பின்: பொத்துவிலில் சிங்கள குடியேற்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அவை பரந்தளவில் சாத்தியப்படவில்லை.**

சுனாமிக்குப் பின்னர் மக்கள் அனைவரும் தமது உயிர்களை, உடமைகளை இழந்து நிர்க்கதியான வாழ்வில் நின்று கொண்டிருந்த சமயம் பார்த்து, பொத்துவில் பிரதேசத்தின் பகுதிக் கிராமமான 'உல்லை'யில் அவசர அவசரமாக அழகான சிலைகளை நிறுவுவதில் சிங்கள மக்கள் காட்டிய ஆர்வமும் பேரின அரசியல்வாதிகள் காட்டிய அக்கறையும், முஸ்லிம் மக்களை விழிப்படையச் செய்தன. உல்லையில் 'ராளாமிசந்தி'யில் R.D.A.க்குச் சொந்தமான நிலத்தில் மாபெரும் சிலைகளை நிறுவி ஒரு மாத காலம் செல்லுமுன்னரே இன்னுமொரு புத்தர் சிலையை பாதுகாப்புடன் ஊர்வலமாக கொண்டு சென்று முன்பு சிலை நிறுவிய இடத்திற்கு அண்மித்த முஸ்லிம்கள் மட்டும் வாழும் இடமான பசறிச்சேனை, குடாக்கள்ளி 'முதலை கல் மலை'யில் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிங்கள மக்களினதும் அரசியல் வாதிகளினதும் திட்டமிட்ட சிலைவைத்தல், சிங்கள மக்களை குடியேற்றல் போன்ற சதித்திட்ட வேலைகள் முஸ்லிம் மக்களை மேலும் விழிப்படையச்செய்தன. இதன் காரணமாகவே கவனயீர்ப்புப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இதை சகித்துக் கொள்ள முடியாத பேரினவாதிகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் பிரச்சாரமே முஸ்லிம்கள் மீது சுமத்தும் பழியாகும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் அரசியல் வாதிகளும் இணைந்து மேற்கொண்டு நடாத்த வேண்டிய போராட்டங்களை அவர்கள் அனைவரும் கைவிட்ட நிலையில், தங்களது உரிமைகளை பாதுகாக்க இம்மக்கள் தாங்களாகவே இப்பேரணியை முன் நின்று நடத்த வேண்டியதாகி விட்டது.

**பொத்துவில் ஊரான்**

---

# புலிகளுக்கு அதிகாரத்தை கொடுத்தால் முஸ்லிம்களுக்கு எதுவுமே கிடைக்காது!

'தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுடன் வெறும் பிரசாரத்துக்காகவே பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். மாறாக முஸ்லிம்களுக்காக புலிகள் எதனையும் செய்யவில்லை. இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்தால் எமக்கு எதுவும் கிடைக்காது. எனவே மனிதாபிமான அடிப்படையில் எமக்காக குரல் கொடுங்கள்' என நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் முஸ்லிம் சமூகப் பிரமுகரும் சட்டத்தரணியுமான ஏ.எல்.ஏ. ஜவாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார். காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்கள் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜவாத் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.



எரிக்சொல் ஹெய்மிடம் சட்டத்தரணி ஜவாத்!



அவர் மேலும் தெரிவிக்கையில்: பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் சமூகமும் முஸ்லிம்களுக்கு சம வாய்ப்பு வழங்குமாறு கோரி வருகின்றனர். முஸ்லிம் தலைவர்கள் உங்களுடன் பேசிய விடயங்கள் பற்றி எமக்குத் தெரியாது.

முஸ்லிம்களுக்கு தனியான கட்டமைப்பு வேண்டும். முஸ்லிம் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். நாம் விடுதலைப் புலிகளுடன் பல தடவைகள் பேசியுள்ளபோதிலும், அவர்கள் மனங்களிலும் செயலிலும் எவ்வித மாற்றங்களும் இல்லை. படுவான்கரைப் பகுதியில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான 35,000 ஏக்கர் காணி இன்னமும் ஒப்படைக்கப்படவில்லை. அவ்வாறு ஒப்படைப்பதற்கு அவர்கள் தயாராகவும் இல்லை. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதனை மறைப்பதற்காகவே குடிசன மதிப்பீட்டை சரியான முறையில் நடத்த விடுதலைப் புலிகள் விடவில்லை. அரச அதிகாரிகளையும் அவர்கள் கட்டுப்படுத்துகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் 2,200 சதுர கிலோமீற்றர் பரப்பு கொண்டதாகும். இதில் 40 சதுர கிலோமீற்றர் பரப்பிலேயே முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இப்பகுதியில் தமிழர்களே குடியமர்த்தப்படுகின்றனர். முஸ்லிம் பாடசாலை ஒன்றிலும் தமிழ் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் முஸ்லிம்களின் நலனுக்கு உத்தரவாதமளிப்பது யார் என்றும் வினாவினார்.

---

# கூடாரமாகி வாழ்வும் அலைச்சலாகி

அந்தி படர்ந்த இருளில்
படுவான்கரைக் காடுகளில்
கரைந்து
ஆந்தைகள் ஒருமித்தலறி
காற்றும் உறுமி
பேய்களின் கூத்துகளோடு



இரவு மயானமாகி
உயிர் மீளவும் ஊசலாடும்.

வெளிச்ச விளக்குகள்
மட்டான
சிறு கூடாரங்களில்
துயர் சூழ்ந்து பரிதவித்து
ஒருத்தருக்கொருத்தர்
ஆதர்சமாகி
துயிலை சாமத்தில் கலவி
வாழ்தல் அபத்தமாகி.

காதல் பாடல்கள் ஒலித்த
எங்கள் வாழ்வானது
தெருக்களில் கிடந்து நசிந்து
மிகுந்த இம்சையும்
நீண்ட அலைச்சலுமான
இந்தக் கோடைத்தகிப்பில்

மலை உச்சிகளில்
அல்லது வனாந்திரங்களில்
புறாக்கூடுகள் போன்று
பரண்கள் மாதிரி
சிறு வீடொன்றுதான்
வேண்டும்.
வாழ்ந்தும் மடியவுமாய்.

**றகுமான் ஏ. ஜலீல் - மருதமுனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இளம் சமுதாயத்தின் எதிர்காலம்

**கௌரவத்திற்குரிய பெற்றோர்களின் கவனத்திற்கு...**

'முஃமீன்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். ஒவ்வோர் ஆத்மாவும் நாளைக்காக எதனைச் சேகரித்து அனுப்புகிறது என்பதனைக் கவனித்துக் கொள்ளட்டும்.' (59:18)

உண்மையில் எங்கள் மறுமை வாழ்வின் வெற்றிக்காகவும், இஸ்லாமிய சமூகத்தினதும் எதிர்கால வெற்றிக்காகவும் சேகரித்து, பாதுகாக்க வேண்டிய சொத்துக்களில் முதன்மையானது எங்கள் பிள்ளைச் செல்வங்கள் என்றால் மறுக்க மாட்டீர்கள். எனவே இவர்கள் வளர்க்கப்படுகின்ற விதம்தான் எங்களது சமூகத்தினது போக்கையே நிர்ணயிக்கப் போகிறது என்பதனை ஏற்றுக்கொள்வீர்கள்.

அல்லாஹ்வின் அருளால், நம் பெற்றோர்களில் சிலர், தம் பிள்ளைகள் விடயத்தில் மிகுந்த சிரத்தையோடு, கவனமாக நடந்து கொள்கிறார்கள். பலரினது ஆலோசனைகளோடு ஒழுக்கமாக வளர்த்தெடுக்க முயற்சி செய்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ரஹ்மத் செய்ய வேண்டும். என்றாலும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்ற போது, பல பெற்றோரது கவனக் குறைவும் அதற்கே ஏற்ற விதத்தில் அமைகின்ற பிள்ளைகளின் போக்கும் எம் எதிர்காலத்தை பொறுமையாகவே காட்டிக்கொண்டிருக்கின்றது.

**அன்புக்குரிய பெற்றோர்களே.....**

இக்கையேடு, உங்களுக்கு அறிவுரை கூறுவதற்காக எழுதப்பட்டதல்ல மாற்றமாக அல்லாஹ் கூறுகிறானே...

'மனித சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட சமூகங்களில் நீங்கள் தான் சிறந்தவர்கள் (ஹைறஉம்மத்)' என்று... இந்த ஹைற உம்மத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வில்தான் இக்கையேடு எழுதப்படுகிறது. எனவே, நீங்களும் அதே ஹைற உம்மத்தின் ஓர் உறுப்பினர் என்ற உணர்வோடு தொடர்ந்து படியுங்கள்.

**மதிப்பிற்குரியவர்களே!**

உங்கள் பிள்ளைகளின் பக்கம் கொஞ்சம் கவனத்தைத் திருப்புங்கள். அவர்களைப் பெற்றெடுத்து, பாராட்டி, சீராட்டி மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்க்கின்றீர்கள். அவர்கள் குழந்தைகளாக இருக்கின்ற போது, குலாவியதையும், அவர்களது நல்வாழ்வுக்காகப் பிரார்த்தித்ததையும் எண்ணிப்பாருங்கள்! குழந்தைகள் நிம்மதியாக உறங்க வேண்டும் என்பதற்காக நீங்கள் கண்விழித்திருந்த இரவுகள் எத்தனை! அவர்கள் முகத்தில் சிரிப்பைக் காண வேண்டும் என்பதற்காக நீங்கள் துன்பப்படுவதில் மனநிறைவு அடைந்தீர்கள். அவர்கள் வளர்ந்த பின்னரும் கூட உண்ணவும், உடுக்கவும், வைத்தியத்திற்கும், கல்விக்கும் என்று எத்தனை ஆயிரங்களைச் செலவு செய்திருப்பீர்கள்...!

**சிந்தித்துப் பாருங்கள்!**

இவையெல்லாம் எதற்காக? பிள்ளை, வளர்ந்து ஆளாகி அவனை, அவளை மக்கள் மதிக்க வேண்டும். மக்களது விமர்சனங்களுக்கு இலக்காகி விடக்கூடாது; எங்களதும் சமூகத்தினதும் கௌரவத்தைப் பேணி ஒழுக்கமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தானே.... ஆனால், நடந்து கொண்டிருப்பது என்ன? நாங்கள் பிள்ளைகள் மீது அளவு கடந்த நம்பிக்கை வைக்கிறோம். எனவே அவர்களது சிந்தனையிலும், பேச்சு வழக்கிலும், தோற்றத்திலும், நடவடிக்கைகளிலும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற மாற்றங்களைக் கண்டு கொள்கிறோம் இல்லை. நம்மை அறியாமலேயே நம் பிள்ளைகள் ஷைத்தானின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி, பலியாகிக் கொண்டிருப்பதனை உணர்ந்து கொள்வதில்லை. எங்கள் பிள்ளைகள்?

**வீட்டில்....**

எங்களுக்கு முன்னால் நல்ல முறையில், கட்டுப்பாடாக நடந்து கொள்வதனைக் கண்டு திருப்தியடைகிறோம். வீட்டுக்கு வெளியே அவர்கள் எங்கு போகிறார்கள், என்ன செய்கிறார்கள், யாரோடு சகவாசம் கொள்கிறார்கள் என்பதனைப் பற்றி அலட்டிக் கொள்கிறோம் இல்லை. சிலபோது அவர்கள், எங்கள் சொல் கேட்பதில்லை, வீண் செலவுகளுக்காக பணம் கேட்டுத் தொல்லைப்படுத்துகிறார்கள்; இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறோம். அல்லது இந்த மாற்றங்கள் ஏன் ஏற்பட்டுள்ளன என்று சிந்திக்கத் தவறுகிறோம்.

**பாடசாலையில் ....**

நல்ல பண்பாடுகள் நிறைந்த பிள்ளைகள் இல்லாமலில்லை. ஆனால் பெரும்பாலான பிள்ளைகளின் நிலைமை கவலைக்கிடமாக மாறி வருகிறது.

ஆசிரியர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்! மாணவ, மாணவிகள் மத்தியில் நடிகர், நடிகைகளினது மட்டுமன்றி வேறு ஆபாசமான புகைப்படங்களும் இரகசியமாக புழங்குகின்றன. காதல் தொடர்புகளும், காதல் கடிதங்களும் சர்வ சாதாரணமாகிப் போய்விட்டன.



**என்.எம். முர்ஷித் - கந்தளாய்**

இந்நிலையில் பாடசாலைகளில் கட்டிடங்கள் அதிகரிப்பதில் என்ன பயன் இருக்கிறது? பிள்ளைகள் மேலதிக வகுப்புக்குப் போவதில் என்ன பயன் இருக்கிறது? பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் குறைந்து கொண்டே போவது பற்றிக் கவலைப்படுவதிலும் அதற்காகக் கஷ்டப்படுவதிலும் என்ன பயன் இருக்கிறது?

**வீதியில்...**

பெண்பிள்ளைகள் மீது கிண்டலான வார்த்தைகள் பேசப்படுகின்றன. இதற்குக் காரணம் உங்களது வீடுகளிலுள்ள தொலைக்காட்சிகள் (சினிமா) தான்?

இவற்றுக்கெல்லாம் உடந்தையாக நாங்களே எங்கள் பிள்ளைகள் வண்ண வண்ண ஆடைகளினால் அலங்கரித்துக்கொண்டு வீதியில் அலைய விடுகிறோம். அநேகமான பெண் பிள்ளைகள் கூட இப்படியான கிண்டல்களுக்குப் பழகிவிட்டார்கள் போலும். இந்நிலையில் பெண்களுக்கே இருக்கவேண்டிய கூச்ச உணர்வு கூட குறைந்து கொண்டு செல்வது வேதனைக்குரிய விடயமாக இருக்கிறது.

**யாரும் கண்டுகொள்ளாத (மறைவான) இடங்களில்....**

புகைக்கிறார்கள், கஞ்சா, பியர் பாவனைக்குப் பழகுகிறார்கள். தரங்கெட்ட திரைப்படங்களைப் பார்க்கின்றார்கள். (இதற்குப் பகிரங்கமாகவே சந்தர்ப்பங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற எம் சகோதரர்கள் பொறுப்புச் சொல்லியே ஆக வேண்டும்)

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குப் பலியாகிறார்கள். இப்படியும் நடக்கிறதா? ஆம் நடக்கிறது. ஆனால் ரகசியமாக நடந்து முடிந்து பின்னரே கவலைப்படமுடிகிறது.

பெற்றோர்களே! இந்நிலையில் நாங்கள் பிள்ளைகளின் விடயத்தில் எந்த இடத்தில்.... என்று சிந்தித்துப் பாருங்கள்.

01. அவர்கள் வழி தவறிச்செல்வதற்கு எங்களது வாழ்விலே முன்மாதிரி இருக்கிறதா? நாங்கள் புகைக்கிறோம். சினிமா பார்ப்பதைத் தவற விடுவதில்லை எங்களது தொழில், எங்களது நிலைமை எவ்வாறு இருக்குமோ: அவ்வாறுதான் பிள்ளைகளும் இருப்பார்கள்.

02. சினிமா, ஆபாசமான புகைப்படங்களும், கதைகளும் மலிந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் பார்ப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். இஸ்லாமிய சஞ்சிகைகள் இருக்க வேண்டிய எங்கள் வீட்டு மேசையில் ஆபாசமான புகைப்படங்கள் நிறைந்த குப்பைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை உணர்கிறோமா?

03. எங்கள் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களோடு அதிகமாகப் பழகுகிறார்கள் என்பதைக் கவனிப்பதில்லை.

04. தம்வயதையும் விடக் கூடியவர்களுடனான தொடர்புகள் வயதுக்கு மிஞ்சிய பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்பதைக் கவனித்தீர்களா?

05. எங்களிடம் கொஞ்சம் வசதி வந்துவிட்டால் பிள்ளைகள் கேட்கின்றபொழுது கொம்பியூட்டர் வாங்கிக் கொடுக்கிறோம். ஆனால், இன்டர்நெட்டிலும், சீடிகளிலும் பல படுமோசமான ஆபாசமான புகைப்படங்களும்.... திரைப்படங்களும் மலிந்து கிடக்கின்றன. என்பதிலும் கவனம் செலுத்தத் தவறிவிடுகிறோம். அவற்றையெல்லாம் இரசிக்கின்ற நிலையில் எங்கள் பிள்ளைகள் இருக்கிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட, சில பிள்ளைகள் மூலம் ஏனைய நல்ல பிள்ளைகளும் ஒழுக்கம் கெட்டுப் போய்க்கிடக்கின்றார்கள். எவராவது பிள்ளைகள் பற்றி எங்களிடம் முறையிட்டாலும் கூட, பிள்ளைகள் மீது கொண்ட மிதமிஞ்சிய நம்பிக்கையின் காரணமாக அலட்சியமாக இருந்துவிடுகிறோம். மாற்றமாக வந்து முறையிட்டவர்களைக் குறை கூற ஆரம்பித்து விடுகிறோம். இந்த அலட்சியமான போக்கு முழுச்சமூகம் கெட்டுச் சீரழிந்து போவதற்கு வழி வகுக்கலாம் என்பதனை மறந்து விடுகிறோம்.

எனவே, எம் சமூகத்தின் சொத்தாகிய (எங்கள்) பிள்ளைகள் விடயத்தில் மிக்க அவதானமாக இருப்பது எங்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாகும்.

'நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களே! எனவே, உங்களது பொறுப்புகள் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். (ஹதீஸ்) பிள்ளைகள் வகுப்பில் - பாடங்களில் புள்ளிகள் தொடர்ச்சியாக குறைந்து செல்கின்றதா? வீட்டில் இருப்பதைவிட வெளியில் இருப்பது அதிகமானதா? உங்கள் பெண்பிள்ளைகள்....இரவில் தாமதித்து வீட்டுக்கு வருகின்றனரா?

ஓய்வு நேரங்களை எவ்வாறு கழிக்கின்றனர்? எப்படியான புத்தகங்களை அதிகமாக வாசிக்கின்றார்கள்? எப்படியான நிகழ்ச்சிகளை டீ.வி.யில் விரும்பிப்பார்க்கின்றார்கள்? எப்படியான வானொலி நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டுகிறார்கள்? என்று விழிப்பாகவே இருக்க வேண்டும். வினயமாகவும், நலினமாகவும், நிதானமாகவும் அவதானிக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் செய்யாத குற்றத்துக்காகத் தண்டிக்கப்படவும் கூடாது. மிதமிஞ்சிய நம்பிக்கையின் காரணமாக அவர்களது போக்கில் அசட்டையாக இருந்து விடவும் கூடாது.

**பெற்றோர்களே...**

இவற்றைக் கவனத்தில் கொள்ளாமல், நமது பாட்டில் இருந்து விடுவோமென்றால் எமது எதிர்காலம் வெறும் சூனியமாகத்தான் மாறிவிடும். (அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்) அதாவது தொப்பியணிந்த, பர்தா அணிந்த அரபுச் சொற்களைத் தம் பெயர்களாகச் சூட்டிக்கொண்ட ஷைத்தானின் நண்பர்களாகத்தான் எங்கள் அன்புச் செல்வங்களைக் காணநேரிடும். ஒன்றுமறியாத அவர்கள் மறுமை நாளில் எங்களை அல்லாஹ்வின் முன்னிலையில் குற்றம் பிடிப்பார்கள். அப்படியென்றால் இந்நாளில் அல்லாஹ்வைச் சந்திக்கின்றபோது எங்களிடம் என்ன பதில் இருக்கிறது..?

**எனவே இது தொடர்பாக...**

பள்ளிவாயல் நிருவாகசபை, ஆசிரியர்கள், உலமாக்கள், பொது நல அமைப்புகள், நலன் விரும்பிகள் அனைவரும் இந்த விவகாரத்தை பொறுப்பு வாய்ந்தவொரு வேலையாக எடுத்து நமது இளைய தலைமுறையினரை நல்வழிப்படுத்த உறுதியான உறுதிபூண வேண்டும். எம் சமூகத்தின் ஒவ்வொரு பிள்ளையும் தம் சொந்த மகனாக, மகளாக கருதி கண்டிப்போடும், அன்போடும் நடந்து கொள்ள வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ், எமது எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி, முயற்சிகளை அங்கீகரித்து அருள் புரிவானாக...!

முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்



தபாலில் அனுப்பிவைக்கப்படும்!

விலை 200/=

முஸ்லிம் அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் வாசித்தறிய வேண்டிய அவசியமான ஆவணம்! புத்தகம் தேவைப்படுவோர், முஸ்லிம் குரல் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொள்ளலாம்!

- Advt -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னாள் எம்.பியும் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளருமான சகோதரர் ஹரிஸ் உடனான நேர்காணல்!**

# அதாஉல்லா தலைமையிலான மாற்று அணி தோல்வி கண்டுவிட்டது!

# அமைச்சர் பதவி கடந்த அரசியல் முஸ்லிம்களுக்குத் தேவை!

*கே. கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. அதிகம் பாதிக்கப்பட்ட அம்பாறை பிரதேச மக்களின் நிலைமை எப்படியிருக்கிறது?*

ப. குறிப்பாக அம்பாரை மாவட்டத்தில் - நான் பிரதிநிதித்துவம்செய்கின்ற தொகுதி கல்முனைத் தொகுதி. அங்குதான் ஆகக்கூடுதலான உயிரிழப்புகள் ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இப்போது இடைத்தங்கல் முகாம்கள் சில அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை அங்கிருக்கின்ற அனைத்து அகதி மக்களுக்கும் போதுமானதாக இல்லை. மேலும் பெரும்பாலான மக்கள் இப்போதும் கூடாரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கடும் மழை, கடும் வெயில் வருகின்ற போது மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் சுனாமி அனர்த்தம் நடந்து நான்கு மாதங்களாகியும் அம்மக்களின் அன்றாடத் தொழில் வாய்ப்புகள், கல்வி நடவடிக்கைகள் மீளக் கட்டியெழுப்பப்படவில்லை. பொதுவாக பாதிப்படைந்த பாடசாலைகள் ஏனைய பாடசாலைகளோடு இணைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அவை பின்னேர பாடசாலைகளாக 1.30 மணிதொடக்கம் 5.00 மணி வரை ஒரு குறுகிய நேரத்தில் கல்வி ஊட்டப்படுவதனால் . மாணவர்களின் கல்வி கூடுதலாக பாதிக்கப்படுகிறது. அதேபோன்று கடலுக்குச் செல்கின்ற மீனவர்களினுடைய வள்ளங்கள், மற்ற ஏனைய உபகரணங்கள் சரியான முறையில் வழங்கப்படவில்லை. அதேபோன்று ஏனைய சுயதொழில் செய்கின்றவர்களுக்கும் போதிய வசதிகள் மேற்கொள்ளப்படாமையினால் இன்னும் அவர்கள் ஒரு சோகமான வேதனையுடன் வாழ்வதையே அப்பகுதியில் இன்னும் காணலாம்.

*கே. நீங்கள் பாதிக்கப்பட்ட மக்களுடன் நின்று பணியாற்றியுள்ளீர்கள், இப்போது அந்த மக்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றது?*

அங்கு வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்கள். இவ்விரக்தியின் வெளிப்பாடாகவே ஒரு மாதத்திற்கு முன்னர் வரலாற்றில் மருதமுனையில் முதன் முறையாக சாலை மறியல் போராட்டம் என்ற ஒரு வெகுஜன போராட்டத்தினை நடத்தினார்கள். அந்த மக்கள் தங்கள் வாழ்க்கை மீது நம்பிக்கை இழந்ததன் வெளிப்பாடே அப்போராட்டம் எனக்கூறலாம். இதுதான் இப்போது அம்மக்களுடைய உணர்வு என்று நான் கருதுகின்றேன்.

*கே. நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கம்தானே இப்போது பதவியில் இருக்கின்றது. அப்படியானால் இதற்கு என்ன முயற்சி எடுத்துள்ளீர்கள்?*

ப. இந்த அரசாங்க கட்டமைப்பில் எங்களுடைய தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பங்காளியாகவிருக்கிறது. துரதிஷ்டவசமாக ஒரு சில ஆயிரம் வாக்குகளால் கடந்த தேர்தலில் நான் தெரிவு செய்யப்படவில்லை. இந்த அரசாங்கத்தில் தேசிய முஸ்லிம்காங்கிரசை சேர்ந்த அதாவுல்லா அமைச்சராக இருக்கிறார்; சகோதரர் அன்வர் இஸ்மாயில் பிரதி அமைச்சராக இருக்கிறார். இவர்கள் இருவரும் கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இந்த அமைச்சின் ஊடாக குறிப்பாக ஜனாதிபதி அவர்கள் இந்த அமைச்சுக்கு வேண்டியளவு நிதியினை ஒதுக்கியிருக்கிறார். அந்த நிதியினை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதைத்தான் நான் கடந்த ஒரு மாத காலமாக கூறிவருகின்றேன்.

இப்படி நான் சொல்வது அமைச்சர் அதாவுல்லாவையோ அல்லது பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையோ கேவலப்படுத்துவதோ அல்லது அவர்களுக்கெதிரான அரசியலோ அல்ல. வேதனைப்படுகின்ற, கஷ்டப்படுகின்ற மக்களுக்காக சரியான முறையில் தனது நிதியினை ஒதுக்குங்கள் என்ற குரலாகவே நான் இதனைக் கூறினேன். குறிப்பாக அதாஉல்லா எடுக்கின்ற தீர்மானங்கள் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு நேரடியான உதவியாக அல்லது தீர்மானமாக இருக்கவில்லை. அமைச்சர் அதாஉல்லாவுடைய தீர்மானங்கள் அகதியாக இருக்கின்ற அந்த மக்களுக்கு எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை. உண்மையாகவே இன்று கூட இடைத்தங்கல் முகாம்களின் தேவை அதிகமாக இருக்கின்றது. அதேபோன்று வீடுகள் அமைக்கப்படுகின்ற, வீடுகள் திருத்தப்படுகின்ற, புதிய கிராமங்கள் உருவாக்கப்படுகின்ற தேவைகள் அங்கு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று கல்வி போதிப்பதற்காக பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும். இப்படி பலதேவைகள் இருந்து கொண்டிருக்கிறது. முதற்கட்டமாக' இடைத்தங்கல் முகாம்களை அவர்களது அமைச்சின் மூலம் உருவாக்குவதற்காக முயற்சி செய்திருந்தால், நிச்சயமாக இன்று அகதிகளாக இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் தற்காலிக இருப்பிட வசதிகளை இந்த அமைச்சு செய்திருக்கலாம் என்பதே எனது கூற்றாகும்.

*கே. கடற்கோள் அனர்த்தத்தின் பின்பு வடக்கு கிழக்கு மாகாணத்தில் மிகமோசமான புறக்கணிப்பையே அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இன்று விடுதலைப் புலிகளோ, அல்லது சர்வதேச சமூகமோ, கடற்கோள் அனர்த்தத்தின் பின்பு ஏற்பட்ட இழப்பீடுகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பை வேண்டி நிற்கின்றன. இது பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?*

ப. பொதுவாக விடுதலைப்புலிகள் வேண்டி நிற்கின்ற கட்டமைப்பை ஜனாதிபதி அவர்கள் எந்த இடத்திலும் மறுக்கவில்லை. பொதுவாக ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான இழுபறி நிலையே இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. உதாரணமாக ஜே.வி.பி. போன்ற கட்சிகள் இதனை செயற்படுத்த முடியாமல் உள்ளது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களுடைய உணர்வு என்னவெனில், ஏற்கனவே வடகிழக்குப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்கள் பல்வேறு விதத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்ததை அவர்கள் அறிவார்கள். விடுதலைப் புலிகளுடைய செயற்பாடுகள், வட- கிழக்கு மாகாண சபையாக இருக்கட்டும் அல்லது அதற்கு பிறகு வந்த புரிந்துணர்வு ஒப்பந்தமாக இருக்கட்டும், அல்லது ISGA திட்டமாகவிருக்கட்டும், எல்லா விடயங்களிலும் சிரான் போன்ற அமைப்புகளிலும் முஸ்லிம்களை அவர்கள் சரியான விதத்தில் கையாளவில்லை. அவர்கள் முஸ்லிம்களை இன்று எவ்வாறு அதாவது மத்திய அரசில் தமிழ் மக்களுக்கு உரிய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருப்பதைப் போன்று வடக்கு-கிழக்கில் ஏற்படப்போகின்ற நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம்கள் சாதாரண பிரதிநிதிகளாக இருந்தால் போதும் என்ற கூற்றைக் கூறுகின்றார்கள். உண்மையிலே முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் அறிவுபூர்வமானதாக சிந்தித்தால் கடந்த 50 வருட காலமாக தமிழ் மக்கள், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக மட்டும் இருந்து கொண்டு தமது உரிமைகளை அடைய முடியாது என்று எண்ணி போராட்டத்தை முன்னெடுத்தார்களோ, அதேவிடயத்தை மறந்து முஸ்லிம் சமூகத்தை மிகவும் மேலோட்டமாக இந்த இடத்தில் புலிகள் புரிந்திருக்கிறார்கள் என்பதே எனது நிலைப்பாடு. முஸ்லிம் பிரதிநிதிகள் என்பதை முஸ்லிம்கள் ஏற்று அதற்குரிய பதவியைக் கொடுத்தால் புலிகளுடைய நிருவாகத்தை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற எடுகோளை எந்தவொரு கட்டத்திலும் முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.




**மாற்று சக்தியாக முஸ்லிம்களுக்கு தலைமை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் தேசிய முஸ்லிம் காங்கிரசை உருவாக்கினோம். முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்திற்கு உறுதுணை வழங்க வேண்டும் என்ற தொனியில் வந்தவர்களே முஸ்லிம்களுக்கு எதிராக அநியாயம் நடக்கின்ற போது மௌனமாக இருப்பதை, செயற்படுகின்றதை பார்க்கின்றபோது அவர்களுக்கும் முஸ்லிம்காங்கிரஸிற்கும் எந்த வித்தியாசமுமில்லை என்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.**

*கே. நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை அன்று பேச்சுவார்த்தைகளிலோ, பொதுவான தீர்வு விடயங்களிலோ முஸ்லிம் அரசியல் தலைமைகளை கலந்தாலோசிக்கவில்லை, முஸ்லிம்களை கணக்கெடுக்கவில்லை என்றுதான் நீங்கள் எதிர்த்தீர்கள். ஆனால் இன்று பொதுக்கட்டமைப்பு தொடர்பாக மூடிய திரைகளுக்குள்ளே நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் கூட, முஸ்லிம்கள் கருத்தில் கொள்ளப்படவில்லையே?*

ப. பொதுக் கட்டமைப்பு என்ற விடயம் அரசியல் அரங்கத்திற்குள் வந்தபோது தேசிய முஸ்லிம் காங்கிரஸினுடைய நிலைப்பாட்டை நான் செயலாளர் நாயகம் என்ற ரீதியில் அறிவித்திருந்தேன். முஸ்லிம் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும், நிருவாகம் செய்வதற்காகவும் வேண்டி தனியான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயம் என்னால் வெளிப்படுத்தப்பட்டது. எங்களுடைய அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களினால் ஜனாதிபதிக்கு இந்த விடயம் தெளிவான முறையில் உணர்த்தப்பட்டிருக்கும் என்று எனக்கு கூறப்பட்டது. ஆனால் ஜனாதிபதிக்கும் சொல்ஹெய்மிற்குமிடையிலான பேச்சுவார்த்தையில் எங்களது முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீங்கள் குறிப்பிடுவதைப்போல் திரை மறைவில் சில விடயங்கள் நடைபெறுவதானாலும், அந்த விடயங்கள் இன்னும் முற்றுப்பெறாததனாலும் இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது பற்றி தெளிவாக கூற முடியாதுள்ளது. ஆனால் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் குறிப்பாக ஆளும் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்த இடத்தில் ஒரு கடமைப்பாடு இருக்கிறது. அதாஉல்லாவும் அன்வர் இஸ்மாயிலும் பேரியல் அஷ்ரஃபும் மற்றும் ஏனைய அரசாங்க முஸ்லிம் பிரதிநிதிகளும் இந்த விடயத்தில் மௌனமாக இருக்க முடியாது. இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கும் சொல்ஹெய்மிற்குமிடையில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுடைய விடயம் சரியான விதத்தில் கையாளப்பட வேண்டும். முஸ்லிம்களுடைய கட்டமைப்பு சரியான விதத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்பதைப்பார்க்க வேண்டிய கடமை முஸ்லிம் அமைச்சர்களுக்கு இருக்கின்றது என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(தொடர்ச்சி... 12ம் பக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி (ஸல்) வழியே நல்வழி!

(அதிரை அருட்கவி)
மௌலவி எம்.ஆர்.எம். ஹலீமுல்லாஹ்

கலைமறையாம் முகம்மதெனும் காரணம்தான் இல்லை எனில்
ககனத்தில் களியில்லை, காட்சியில்லை, கனிவில்லை,
நிலையான வாழ்வில்லை, நிம்மதியும் மகிழ்வில்லை
நிலமில்லை வானில்லை நீந்துகின்ற முகிலில்லை
(நல) நலமூட்டும் சொர்க்கமுமே நரகமுமே இல்லையன்றோ
நடுநிசியும் உறங்காமல் கிடந்தாடும் கடலில்லை;
மலை இல்லை; மாட்சி இல்லை; மாநபிக்காய் ஈருலகும்
(மலர்ந்) மலர்ந்தனவே ஆதலினால் நபி வழியே (நல்வழியாகும்.)

ஆளுமிறை தூதரென அவதரித்த தூய நபி
அப்துல்லா செல்வமென அவனி வந்த நாதர் நபி
நாளுபிறை தனை எண்ணும் நங்கையர் ஆமினாவின்
நல்மகனாய்ப் பிறந்திட்ட நாயகமோ பிறக்கையிலே
சீலமுடன் குறிமறைத்து சீரொழுக்கம் காத்தார்கள்,
சிறப்புமிகு கலிமாவின் விரல் உயர்த்தி வந்தார்கள்
பாலரென வரும் போதே பண்பு நிறை கண்டவராம்;
பைஹம்பர் நன்நெறியை பாராதிருக்கின்றோம்.



அறப்பண்பு கண்ட நபி; அன்பு வழி நின்ற நபி
ஆசைகளைக் கொன்ற நபி; அகமடக்கி வென்ற நபி
துறவி நபி, தூதர் நபி, துய்ய குணசீலர் நபி
துடித்தெழுந்தீ சினங்காமம் துணித்தெறிந்த வீரர் நபி
பொறுமைதனைக் காத்த நபி; புன்சிரிப்பைச் சேர்த்த நபி
பொய்யுரைக்கா மெய்யுரைத்தே புகழாக ஆன நபி
(பேசாச்) குறைபேசா சிறந்த நபி கொள்கையெல்லாம் நற்பண்பே!
கொன்று பாவம் இன்றிருந்தே கொள்வோமப்பண்புகளை

வானத்தை பூமிதனை வண்ணமுறப் படைத்தவனே
வள்ளல் நபிக்(கு) அருள் புரிவாய் வளர் ஆசி பொழிந்திடுவாய்
தேனொத்தத் 'தீன்' தந்த வானத்து வழி வேதம்
தேங்கு புகழ் நபிக்கீந்து தீங்கெல்லாம் மாய்த்தவனே
ஆனமட்டும் அருள்புரிவாய் அவர்கிளையார் அனைவோர்க்கும்
அந்தரங்கம், பகிரங்கம் அறிந்தவனே எங்களுக்கும்
வான் மழை போல் வளரருளை வற்றாமல் அருள்வாயே
வள்ளல் நபி பண்புகளை வளர்த்துயர்வை அருள்வாயே! ஆமீன்!

# அந்நியவர்களுக்காக முஸ்லிம்களுடைய கலாசாரத்தை மாற்றுவதா?

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதியே சேருவில என்பதாகும். இத் தொகுதியில்தான் சிங்கள மக்களின் முக்கியமான , வழிபாட்டுத்தலமான 'சேருவில பன்சல' அமைந்துள்ளது. எனவே இதனைப் பார்ப்பதற்கு பல இனமக்களும் அங்கு செல்வது வழக்கம். அதேவேளை. முஸ்லிம் மக்கள் செல்கின்றபோது அவர்களுக்கு சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது தொப்பி. ஜூப்பா அணிவதோ. ஸ்ஹாப். பர்தா அணிவதோ தடை செய்யப்பட்டிருக்கின்றது. இதனை ஏற்று முஸ்லிம்கள் அங்கு சென்று கொண்டே இருக்கின்றார்கள். எனவே அந்நிய மதத்திற்காக நாம் எமது கலாசாரத்தை தாரைவார்ப்பதா? சற்று சிந்திக்க வேண்டும். எமது கலாசாரத்தை குப்பைத் தொட்டியில் போடுவதற்கு நாம் அடிப்படையாக அமைந்து விடக்கூடாது என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இ. நளீம் - மூதூர்.

# சமாதான நீதவான்!



தோப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சீ.எம். ஹபீபுல் றஹ்மான் என்பவர் நீதி. சட்ட. மறுசீரமைப்பு அமைச்சினால் தீவுமுழுவதற்குமான சமாதான நீதவானாக நியமனம் செய்யப்பட்டு. மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.கனேசராஜா அவர்களின் முன்னிலையில் சத்தியப் பிரமானம் செய்து கொண்டார்.

இவர் தோப்பூர் பொது நூலகத்தில் நூலகராக கடமையாற்றுவதுடன். இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்க செயலாளராகவும். சமாதான குழு உறுப்பினராகவும். அஸ்ரப் லங்கா விளையாட்டுக் கழக தலைவராகவும் அல் மத்ரஸத்துல் மதனிய்யா அரபுக் கலாசாலையின் நிர்வாக சபை உப செயலாளராகவும் இருந்து சமூகப் பணிகள் பலவற்றையும் மேற்கொள்ளும் இவர். ஓர் எழுத்தாளரும் ஆவார்.

தோப்பூர் செய்தியாளர் எஸ்.எல். நௌபர்

# பாடசாலை மாணவன் கையை இழந்தான்!

கடந்த பாடசாலை விடுமுறையை அடுத்து; பாடசாலை திறந்த முதல் தினத்திலேயே ஏனைய மாணவர்களுடன் பாடசாலைக்கு ஓட்டோவில் சென்ற மாணவன்; வேகமாக வந்த லொறியுடன் ஆட்டோ மோதியதால் ஒருகையை இழந்தான். மேற்படி சம்பவம் பொலநறுவை கதுருவெலவில் நடந்தது.

கதுருவெல முஸ்லிம் வித்தியாலயத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி பயிலும் முகமட் அகார் என்ற மாணவனுக்கே இப்பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்த போது கைமரங்களை ஏற்றி வந்த லொறி பாடசாலை மாணவர்கள் பயணித்த ஆட்டோவுடன் மோதியதால் அச்சமயம் இச்சிறுவனின் கை துண்டாடப்பட்டு பாதையில் வீசி எறியப்பட்டதாக தெரிவித்தனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மாணவன் பொலநறுவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் துண்டிக்கப்பட்ட கையை இணைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பொறுமை

எங்கள் மனங்களில் எழுகின்ற ஆசைகளை கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதையே நாங்கள் 'பொறுமை' என்ற சொல்லினால் விளக்குகின்றோம். எங்கள் மனம் எப்போதும் எல்லாவகையான பொருட்களிலும் தரத்தில் உயர்ந்தவற்றையே விரும்புகின்றது. பொதுவாக. அடிப்படைத் தேவைகளை எடுத்துக் கொண்டால் கூட எமது மனம் அவற்றில் ஆடம்பரத்தையே விரும்புவதை நாம் காணலாம். என்றாலும் அடிப்படைத் தேவைகளான உணவு. உடை. உறையுள் என்பவற்றை எமது இயலுமைக்கும் பொருளாதாரத்திற்கும் ஏற்றவிதத்தில் பூர்த்தி செய்து கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

பொறுமையானது உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வதற்கும். கைக்கு எட்டாதவற்றுக்கு ஆசை கொள்ளா திருப்பதற்கும் எமக்குக் கற்றுத்தருகின்றது.



இவ்வாறு கையில் இல்லாத ஒன்றுக்கு மனம் ஏங்கித் தவிப்பதை விட்டுவிட்டு உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்கின்ற பழக்கம் எம்மிடம் வந்தால் எமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற 80% மான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து விடும். வாழ்க்கையில் இன்பங்கள் துன்பங்களை சந்திக்கின்ற போதும். எதிர்ப்புக்கள் சோதனைகள் போன்றவற்றை எதிர்கொள்கின்ற போதும் மனம் தளர்ந்து விடாமல் வாழ்க்கையின் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு உதவுவது இந்தப் பொறுமைதான்.

எனவே பொறுமை வாழ்க்கையின் பொக்கிசமாகும். அதனை கடைப்பிடித்து வாழ பழகிக் கொள்வோம்.

ஹம்மாது ஹலீம்தீன்
முக்கிரியாவ.

# ஏன் இந்த நிலைமை?

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையில் இலட்சக்கணக்கானோர் நிர்க்கதியாகி 02 மாதங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கூட. அவர்களுக்கு சிரமமான முறையில் நிவாரண பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தாமல் இருப்பது மட்டுமன்றி. அரசாங்க நிவாரணப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படும் போது நிர்க்கதியானோரின் எண்ணிக்கையினை கருத்தில் கொள்ளாமல் பொடுபோக்குத்தனமாக பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவதன் காரணமாக பல மாவட்டங்களுக்கு சில பொருட்களில் எதுவுமே கிடைக்காததோர் நிலை உருவாகியிருப்பதாக அறிய முடிகிறது. தற்போது அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிவாரண உதவிகளின அளவுக்கு அமைய ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களில் பாரிய வேறுபாடு நிலவுகிறது அதன் படி. மாத்தறை மாவட்டத்தில் நிர்க்கதியான ஒரு நபருக்கு 18 கிலோ அரிசி வழங்கப்படும் போது காலி மாவட்டத்திலுள்ள நிர்க்கதியான ஒருவருக்கு வழங்கப்படுகின்ற அரிசியின் அளவு 800 கிராமாக உள்ளது. ஏன் இந்த நிலைமை? உரிய அதிகாரிகளே உங்களின் கவனத்திற்கு!

முஸ்லிம் குரல்
MUSLIM KURAL
படைப்பாளிகள் கவனத்திற்கு!
1–59 இதழ்கள் (பைண்டிக் தொகுப்பு) தேவைப்படுவோர்!
ரூபா. 1000/- க்கான காசுக்கட்டளை/ காசோலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடு
சிங்கள ஊடகங்கள்...

# பொதுக் கட்டமைப்பா? பன்முகக் கட்டமைப்பா?



நன்றி - லங்கா தீப
(சுருக்கப்பட்ட வடிவம்)

வடக்கிலும் தெற்கிலுமுள்ள அனைத்து ஜனநாயகவாதிகளையும் மக்களையும் இணைக்கும் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கே நாம் சுனாமி காலகட்டத்தினை பயன்படுத்தியிருக்க வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களினதும், மக்களினதும் வாழ்வை மீளக்கட்டியெழுப்பும் கைங்கரியத்தினை அனைத்துக் கட்சிகளினதும் முன்னணியிடம் கையளித்திருக்க வேண்டும். ஆனால் கடைசியில் அவ்வாறான விரிவான ஐக்கியம் இன்றி தனியொருவருக்கான பிம்பம் மட்டுமே கட்டியெழுப்பப்பட்டது. கடந்த 03 மாதங்களில் நடைபெற்ற மாற்றம் நடைபெறாதவற்றினை (முக்கியமாக வீடமைப்பு . மீள் குடியேற்ற

> **வடக்கு கிழக்கின் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பல்லின, பலமத, பலகட்சி கூட்டுறவுடனான கட்டமைப்பொன்று தேவையென்பதில் எவ்வித விவாதத்திற்கும் இடமில்லை.**

பிரச்சினை தொடர்பில்) நோக்கும் போது இந்த (One Woman Show) வானது செயலூக்கமற்றதொன்றாகவே காணக் கூடியதாக உள்ளது.

இத்தகையதோர் சந்தர்ப்பத்திலேயே வடக்கு-கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகள் தம்மை சார்ந்ததாக இருக்க வேண்டுமென்ற புலிகளின் கோரிக்கைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. சுனாமியின் பின்னர் தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக வடக்கு -கிழக்கின் நிவாரண. புனரமைப்பு நடவடிக்கைகளை தாமதமாக்கிக் கொள்வதற்கே புலிகள் முயன்றனர். இதன் மூலம் நேரடியாக வெளிநாட்டு உதவிகளை பெற்று தாம் உத்தியோகபூர்வமற்ற தனிநாட்டினர் என்ற சர்வதேச வரவேற்பினை பலப்படுத்திக்கொள்ள புலிகள் முயற்சித்தனர்.

வடக்கு கிழக்கின் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பல்லின, பலமத, பலகட்சி கூட்டுறவுடனான கட்டமைப்பொன்று தேவையென்பதில் எவ்வித விவாதத்திற்கும் இடமில்லை. அவ்வாறான பன்முக ஜனநாயக கட்டமைப்பிற்கு வடக்கு கிழக்கின் நிவாரண. புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து வளங்களும், அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போது தயாரிக்கப்படுவது அவ்வாறானதோர் கட்டமைப்பல்ல. ஊடகங்களின் கூற்றுப்படி. திட்டமிட்டுள்ள கட்டமைப்பிற்கு தமிழர் பிரதிநிதிகளை நியமிக்கும் ஒரே உரிமை தமக்குரியது என்று புலிகள் கூறுகின்றனர்.

அரசாங்கம் இந்த கோரிக்கையினை ஏற்றுக்கொண்டால், தாங்களே தமிழரின் ஒரே பிரதிநிதி என்று கூறும் புலிகளின் போலிப் பிரலாபத்தினை உறுதி செய்தது போலாகிவிடும். 2002ன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றின் அடிப்படையிலேயே அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையிலான திட்டமிட்ட கட்டமைப்பு அமைந்துள்ளது. இந்தக்கட்டமைப்பினை இலங்கை அரசுக்கும்,

புலிகளுக்கும் வரையறைப்படுத்துவதன் மூலம் இலங்கையில் உத்தியோக பூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற இருவித நிர்வாகம் உள்ளது எனும் கருத்து பலம் பெறும். இதன் மூலம் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கினதும் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கையினதும் பெரும்பாலான அதிகாரத்தினை கைப்பற்றிக் கொள்வதற்கு புலிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இதன் ஊடாக முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் தமது பலத்தினை மீண்டும் வளர்த்துக் கொள்வதற்கு புலிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

2002 புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய அரசியல் நடவடிக்கைகளுக்காக இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பிரவேசிப்பதற்கு புலிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. புலிப்படையில் சிறுவர்களை சேர்த்துக் கொள்வதற்கும், அரசியல் எதிரிகளைக் கொன்றழிப்பதற்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளை படுகொலை செய்வதற்கும், கப்பம் அறவிடுவதற்கும், புதிய முகாம்களை நிறுவுவதற்கும் புலிகள் அந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டனர். திட்டமிட்ட பொதுக் கட்டமைப்பு நடைமுறைப் படுத்தப்படுமானால், நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வகைதொகையின்றி புலிகள் பிரவேசிப்பதற்கும், அவர்களின் விருப்பப்படி படுகொலைகளைப் புரிவதற்கும், சிறுவர்களை கடத்துவதற்கும் அவர்களால் இயலும்.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கே சுனாமியினால் அதிக பாதிப்பு ஏற்பட்டது. ஆகவே, கிடைக்கப்பெறும் உதவிகளுள் பெரும் பகுதி இப்பிரதேசங்களுக்கே வழங்கப்பட வேண்டும். அவ்வாறாக வளங்களைப் பகிர்ந்தளிப்பதே நியாயமானதாகும். ஆனால், இத்தகைய நிதியுதவிகளும், நிவாரண உதவிகளும், இப்பிரதேசங்களிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கே வழங்கப்பட வேண்டுமே தவிர புலிகளுக்கல்ல. முக்கியமாக முஸ்லிம்களின் நிலைமை மிகவும் துக்ககரமானது. அம்பாறை மாவட்டமும், முஸ்லிம் மக்களுமே மிகவும் பாதிக்கப்பட்டனர். அவ்வாறானதோர் நிலையில் புலிகளுக்கு அதிக அதிகாரத்தினை வழங்கக் கூடிய பொதுவான கட்டமைப்பு எவ்வளவு தூரம் நியாயமானது என்பது சிந்திக்கப்பட வேண்டிய தொன்றாகும். பெரும்பாலான முஸ்லிம்களை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றுவதற்கே இன்னும் புலிகள் முயல்கின்றனர். நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கையின் ஊடாக இது செயற்படுத்தப்படாது என்று எப்படி உறுதி கூறுவது?

சமமாக மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதை உறுதி செய்யாத ஜனாதிபதி: நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு என்ற பெயரில் வடக்கு கிழக்கு மக்களை புலிகளிடம் காவு கொடுப்பதற்கு தயாராகிறார்.

இந்த அனைத்து காரணங்களுக்குமாகவே பொதுக் கட்டமைப்புக்குப் பதிலாக பன்முக கட்டமைப்பு தேவைப்படுகிறது. இது புலிகளுக்கும் ஏனையோருக்கும் சமவாய்ப்புக் கிடைக்கக் கூடிய கட்டமைப்பாக இருக்க வேண்டும். புலிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் எந்தவொரு கட்டமைப்பும் புலிகளை பலப்படுத்துவதற்கே உதவும் 2002 புரிந்துணர்வு உடன் படிக்கையின் பாடமும் அதுவே!

# அமைச்சு பதவியிலிருந்து விலகுவேன்!



இன்று நடைமுறையிலிருக்கும் எரிபொருள், மின்சக்தி நடைமுறைகள் உடன்படிக்கைகளுக்கு முரண்பாடாக இருப்பின், தாம் தமது அமைச்சு பதவியிலிருந்து ஒதுங்கிக் கொள்ளப் போவதாக எரிபொருள், மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், எரிபொருள் மின்சக்திகளுக்கான அரச நிறுவனம், அரசின் கீழ் செயற்படுவதே கட்டாயமாகும். அவ்வாறின்றி பெற்றோலியம், மின்சக்தி என்பனவற்றை பிரித்து உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கூறுபோட்டு விற்பனைசெய்ய முயல்வது ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு விடயம் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'தேசிய வளங்கள் விற்பனைக்கல்ல' என்ற கொள்கைதான் ஐ.ம.சு. கூட்டமைப்பினதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினதும் கொள்கையாகும் நாங்கள் அரசியலுக்கு வந்தது வியாபாரம் செய்வதற்கல்ல. மக்களுக்கு சேவை செய்வதற்காகவே. இருப்பினும், அரசியலினூடாக வியாபாரம் நடத்துவோர், எமது தேசிய சொத்துக்களை அதிக லாபத்திற்கு விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். எரிபொருள், மின்சாரம் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் அரச நிருவாகத்தில் வைத்துக் கொண்டு லாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றத்தக்க கூடியதான முன்யோசனையை ஜனாதிபதி முன் சமர்ப்பித்துள்ளோம். அதன்பின்பு ஜனாதிபதி அவர்கள் எடுக்கும் தீர்மானத்தின் பின்பு ஒரு முடிவிற்கு வருவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


பாடசாலை நூல் நிலையங்களுக்கும் வாசிப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கும்

நூல்களின் குறிக்கப்பட்ட விலையிலிருந்து 30% கழிவு வழங்கப்படும்

மீள்பார்வை வெளியீட்டகம்


▸ பலஸ்தீனக் கவிதைகள் (மொழிபெயர்ப்புக் கவிதைகள்) பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் **210/=**


▸ ஈழத்து இலக்கியத்தடம் (கட்டுரைகள்) பேராசிரியர் கா. சிவத்தம்பி **210/=**


▸ மறைத்தலின் அழகு (சிறுகதைத் தொகுதி) எஸ். நசிருதீன் **140/=**


▸ சமகால இலக்கிய ஆளுமைகள் (நேர்காணல்கள்) எம். பௌஸர் **220/=**


▸ பிரபஞ்சம் முதல் பூமி வரை ஏ.எல். ஷிஹாறா (விஞ்ஞானத்துறை மாணவாகளுக்கானது) **160/=**


▸ இலங்கை இனக்குழும அரசியல் (அரசியல் மாணவர்களுக்கானது) அ. யோதிலிங்கம் **100/=**


▸ ஆளற்ற தனித்த தீவில் நிலவு, ஈரமற்ற மழை (கவிதைத் தொகுதி) செழியன் **80/=**


▸ இன்றும் கேட்கும் குரல் (விபுலானந்தர் பற்றியது) செ. யோகநாதன் **200/=**


▸ காவு கொள்ளப்பட்ட வாழ்வு (கவிதைத் தொகுதி) ஏ.எம். ரஷ்மி **150/=**


▸ யுகமொன்று உடைகிறது (சிறுகதைத் தொகுதி) தங்கராசா **120/=**


▸ எல்லை கடத்தல் (கவிதைத் தொகுதி) ஔவை **100/=**


▸ அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும் (அரசியல் மாணவர்களுக்கானது) எஸ். சரவணன் **230/=**


▸ ஊஞ்சல் ஆடுவோம் (சிறுவர் கவிதைகள்) மு. பொன்னம்பலம் **100/=**


▸ தூவானம் (பத்தி எழுத்துக்கள்) அ. யேசுராசா **120/=**


▸ திருக்குறள் ஒழிபியல் (தமிழ்மொழி மாணவர்களுக்கானது) ஏ.எஸ்.எம். பௌஸி **70/=**


வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்!

Advt.

குறிப்பிட்ட நூல், நூல்கள் தேவைப்படுவோர் அதுபற்றிய விபரங்களை எமக்கு எழுதவும். நூல்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படும் - V.P.P வசதியும் உண்டு! காசுக் கட்டளையாக இருந்தால் **M.L.M. Rameed** எனக்குறிப்பிடவும். காசுக்கட்டளை மாற்றும் தபால் நிலையமாக வெல்லம்பிட்டியைக் குறிப்பிடவும்!

தொடர்புகளுக்கு:-
119/15, Vivian Gunawardene Mawatta,
(Kittampahuwa Road) Wellampitiya.
Phone: 077 3131627, Fax: 0114 618979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையல்ல நிஜம்

மூதூர் முகம்மது அலி ஜின்னாஹ்

நான் நேரில் கண்ட ஒரு உண்மைச் சம்பவம் வந்து என்னை எழுது என்கிறது. இதோ நமது அரசியல் வரலாற்றுப் பக்கங்களில் கறை படிந்த பக்கங்களுள் ஒன்று -

2002.02.22ல் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி சரியாக இரண்டு மாதங்களில் 2002.04.21 அன்று மூதூர் முஸ்லிம்கள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமோர் இனவாத தாக்குதலை சர்வதேச சமூகமே அறியும். நாலாபுறமும் கொலை, கொள்ளை, தீவைப்பு என மூதூர் கருகி வெந்து மயானமாக மாற்றப்பட்டு கொண்டிருந்த போது. இராணுவம் கைகட்டி ரசித்துக்கொண்டிருந்ததை அறிந்த, அப்போதைய ஐ.தே.மு. அரசை தன் தோளில் பெருமையுடன் சுமந்து நின்ற மு.கா. தலைவர் துன்பத்தில் பங்கெடுக்க பறந்தோடி வந்தார். பின் அவரது பாராளுமன்ற உறுப்பினர்களும் பரிவாரங்களும் வந்திறங்கினர். சற்று நேரத்தில் மற்றுமொரு கோஷ்டி படுபந்தாவாக வந்திறங்கியது அவர்களும். எம்.பிமாரோ என்று பார்த்தால்.... அவர்கள் தான் அரசியல் அதியுயர்பீட உறுப்பினர்களாம். ஆகட்டும் என்று அனைவரும் அட்டச் பாத்ரூம் உள்ள வீடுகளில் தங்க வைக்கப்பட்டு விருந்துகள் தடபுடலானது. ஊர் புகைந்து கொண்டிருந்ததையும் சனம் மறந்து: தலைவரையும் பரிவாரங்களையும் ரசிக்கத் தொடங்கிவிட்டனர். தாமதம் இன்றி எல்லோருக்கும் சுடச் சுட அறிக்கைகளும் சாரமாரியான சவால்களும் வழ்ங்கப்பட்டன. மக்களும் நரம்பு பிடைக்க புல்லரித்துப் போயினர்.

முதல்வேளையாக புலிகளால் குதறப்பட்ட ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டுவிட்டு தலைவரும் பரிவாரங்களும் கருகிவெந்து சாம்பல் மேடாகிப்போன குடிசைகளை ஊர்வலமாகப் போய் பார்வையிட்டனர். இவை அத்தனைக்கும் மத்தியில் அப்போதையப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பறந்து வந்தார். தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நடந்தது நடந்துவிட்டது இனி நமது அரசு முஸ்லிம்களைப் பாதுகாக்கும் இந்த சமாதானம் முஸ்லிம்களுக்கும் தான். எனவே... டமார் என்று ஒரு செல் வந்து வெடித்தது. கூடவே துப்பாக்கி வேட்டுக்கள் காதுக்குப் பக்கத்தால் காற்றைச் சீவிக்கொண்டு சீறிச் சென்றது. கூட்டம் அலைமோத மூச்சென்டு மிதிபட தலைவர் உட்பட அனைவரும் பூமித்தாயின் மடியில் மூக்கு உரச மழலைகளாய்த் தவழ்ந்தனர். திடீரென திகில் பரவியது. பாதுகாப்பு அமைச்சரைக் காணவில்லை. உடனே பதில் கிடைத்தது: சுமார் 100 மீற்றருக்கு அப்பால் அந்தரத்தில் தாழ்ந்து நின்ற ஹெலிகொப்டரில் தவழ்ந்து கொண்டோடி சென்று தாவியேறி உயரஉயர தப்பினேன் பிழைத்தேன் எனப் பறந்தார். பாதுகாப்பு அமைச்சர் பறந்த திசையை தரையில் குப்புறக்கிடந்த மக்கள் சற்றுத் தலையைத் திருப்பிப் பார்த்தனர். எல்லாம் மின்னல் வேகத்தில் நடந்தது. பாதுகாப்பு அமைச்சர் முன்னாள் ரக்பீ தலைவரும் பொக்சிங் சம்பியனுமாவார் என்பதை பின்னர் கேள்விப்பட்டேன்.

**முஸ்லிம் குரலில் தொடராக வெளிவரும் தமிழர் அரசியல் போராட்டம் பற்றிய கட்டுரை என்னை எமது கடந்த கால கறைபடிந்த அரசியலை இரை மீட்ட வைத்துவிட்டது. நம்பிய மக்களுக்கெதிரான பிரேரணை என்றதும் கடுமையாக எதிர்த்த தமிழ் தலைவர்கள் எங்கே? நம்பிய மக்களிடம் நாக்கூசாமல் பொய்யுரைத்து அறிக்கையிலும் சவாலிலும் காலமோட்டும் கையாலாகாத நம் தலைவர்கள் எங்கே?**

அன்றிரவு ஊர் இன்னுமின்னும் உதைபடுவதற்கான அறிகுறி தென்பட்டது. எனவே எமது விடுதலை வீரர்கள் ஆட்சியின் பங்காளிகளாகவும் இருக்கின்றபடியால். பாதுகாப்புக் கருதி எந்தவொரு ஆரவாரமும் அற்றுக் காணப்பட்ட பொலிஸ் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டனர். மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அன்றிரவைக் கழித்தனர். விடிந்ததும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வாங்கிவர தலைவர்கள் கொழும்பு செல்ல, மக்கள் மீண்டும் அகதி முகாமுக்குச் சென்றனர். பாடசாலைகளும் மத்ரஸாக்களும் தம் வேலையை விட்டுவிட்டு சமாதானச் சூழலில் மீண்டும் அகதி முகாம்களாயின.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கூடியது. (ஐ.தே.மு) ஆட்சியின் பங்காளிகளாகவும் இந்நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்காமல் இருக்கும் முஸ்லிம்களுக்கு, பாதுகாப்பு பகிரங்கமாக மறுக்கப்பட்டதைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நம் தலைவர்கள் கொண்டுவருவார்கள் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ஆனால்; அதற்கெல்லாம் நேரம் ஏது என்று நினைத்தார்களோ என்னவோ. அப்படியொரு பிரேரணை கொண்டு வரப்படவில்லை. எதிர்பார்த்திருந்தோர் மேலுமொருமுறை கூனிக் குறுகினர்.

இருந்தாலும் அப்போதைய எதிர்க்கட்சி அப்பிரேரணையைக் கொண்டு வந்தது. நம்மவர்தான் கொண்டு வரவில்லை. இவர்கள் கொண்டு வந்திருக்கும். பிரேரணையை வெற்றி பெறச் செய்வர் என நம்பினர். அந்த நம்பிக்கையிலும் மேலும் மண்ணள்ளிப் போடுமாப்போல் நம் தலைவர்கள் அப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்து, பாதுகாப்பு அமைச்சரைப் காப்பாற்றினர். அப்படியாயின் அரசு பாதுகாப்பு வழங்காது இருந்தது சரி என்று நம்தலைவர்கள் கையுயர்த்தி தெரிவித்தனர் என்றே மக்கள் விளங்கிக் கொண்டனர். நமது தலைவர்களுக்கு என்ன நடந்தது? யார் என்ன மந்திர மாயம் செய்தனரோ என மக்கள் முடியைப் பிடித்துக்கொண்டு குழம்பினர்.

இப்படி தலைவர்களுக்கு என்ன நடந்தது? என்ற எல்லோரினதும் கேள்வி, மு.கா. தலைவரிடம் முன்வைக்கப்பட்ட போது சுருக்கமாகவும் வழமைக்கு மாறாமலும் தனக்கே உரித்தான வார்த்தைகளால் தான் நிதானமாகவும் பக்குவமாகவும் சாணக்கியமாகவும் அரசியல் செய்வதாக பதில் கூறினார். அது எப்படி என்று மேலும் கேட்டால் அளவுக்கதிகமான கலைச் சொற்களைக் கலந்த பதில் கிடைக்குமென்பதை அறிந்த மக்கள் மேற்கொண்டு தம் நேரத்தை மண்ணாக்க விரும்பாததால் தலையெழுத்தே என்று தத்தம் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டனர்.

முஸ்லிம் குரலில் தொடராக வெளிவரும் தமிழர் அரசியல் போராட்டம் பற்றிய கட்டுரை என்னை எமது கடந்த கால கறைபடிந்த அரசியலை இரை மீட்ட வைத்துவிட்டது. நம்பிய மக்களுக்கெதிரான பிரேரணை என்றதும் கடுமையாக எதிர்த்த தமிழ் தலைவர்கள் எங்கே? நம்பிய மக்களிடம் நாககூசாமல் பொய்யுரைத்து அறிக்கையிலும் சவாலிலும் காலமோட்டும் கையாலாகாத நம் தலைவர்கள் எங்கே?

**ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா? நாம் எழுதுவதற்கும் நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் விவாதங்களைத் தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

# பெற்றோருக்கு நன்மை செய்து இறை திருப்தியை பெறுவோம்!

அல்லாஹ் தனது திருமறையிலே பல இடங்களில் பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு ஏவுகின்றான். இறைவன் தனக்கு வழிப்படுமாறு கூறுவதுடன் சேர்த்து பெற்றோருக்கும் வழிப்படுமாறு கூறியிருக்கின்றமை பெற்றோரின் இருப்பை தெளிவுபடுத்துகின்றது.

"(நபியே) உமதிரட்சகன் அவனைத்தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்றும், பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ உம்மிடத்தில் திண்ணமாக முதுமையை அடைந்துவிட்டால் அவ்விருவருக்கும் 'சீ' என்று (கூட) நீ சொல்ல வேண்டாம். மேலும் விரட்டி விடவும் வேண்டாம். அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!"

இன்னும் இவ்விருவருக்காக இரக்கத்துடன் பணிவு எனும் இறக்கையை நீர் தாழ்த்துவீராக! மேலும் "என் இரட்சகனே! நான் குழந்தையாகி இருந்த பொழுது என்னை அவர்கள் வளர்த்தது போன்று நீயும் அவ்விருவருக்கும் அருள் புரிவாயாக." என்றும் கூறுவீராக!

(அல்குர்ஆன் 17:23,24)



எம். றிஸ்கான் முஸ்தின்
பறகஹதெனிய

மேற்குறிப்பிட்ட வசனத்தில் பெற்றோருடன் நடந்து கொள்ளும் முறை பற்றி மிகவும் தெளிவாக அல்லாஹ் எங்களுக்கு கூறுகின்றான். மேலும் எமது பெற்றோருக்காக வேண்டி பிரார்த்திப்பதற்கு மிகவும் அழகான ஒரு துஆவையும் இறைவன் எமக்கு கற்றுத் தருகின்றான்.

எனவே இவ்வாறான துஆக்களை நாம் தினமும் ஓதி எமது பெற்றோருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் அல்லாஹுதஆலா பின்வருமாறு கூறுகின்றான். "மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். ...."

(அல்குர்ஆன் 4:36)

தன்னை வணங்குமாறு கூறும் இறைவன் அதற்கு அடுத்தபடியாக பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு எமக்கு ஏவியிருக்கின்றான்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களும் பெற்றோருக்கு உபகாரம் செய்யும் படி பல தடவைகள் நபித்தோழர்களை தூண்டியுள்ளார்கள்.

ஒரு நபித்தோழர் யுத்தம் செய்வதற்காக வெளிக்கிளம்பிய சந்தர்ப்பத்தில் "யுத்தம் செய்வதை விட உனது தாயை பராமரிப்பதே உனக்கு மேலாகும்." என நபியவர்கள் ஒருமுறை கூறினார்கள். பெற்றோரை பராமரிப்பது அறப்போர் செய்த கூலியைத்தரும் என்பதை நாம் இதிலிருந்து விளங்கலாம்.

அவ்வாறே ஒரு நபித்தோழர் நபியவர்களிடம் "நான் நேசம் கொள்வதற்கு மிகவும் உயர்ந்தவர் யார்?" என வினவிய போது "உனது தாய்" என நபியவர்கள் பதிலளித்தார்கள். பின்னர் யார்? என வினவ அதற்கும் உனது தாய் என பதிலளித்தார்கள். தொடர்ந்து பின்னர் யார்? என வினவ அதற்கும் உனது தாய் எனக் கூறிவிட்டு பின்னர் உனது தந்தை என நபியவர்கள் விடையளித்தார்கள்.


அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி)

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்.

மேற்குறிப்பிட்ட இரு நபிமொழிகளும் பெற்றோரின் சிறப்பை மிகத் தெளிவாக எமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே நாமும் பெற்றோரை மதித்து அவர்களுக்கு நன்றியுடையவர்களாக வாழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக சுயநிர்ணய உரிமையும் முஸ்லிம் மக்களும்



தொடர் 02

விஸ்வலிங்கம் சிவலிங்கம்

இலங்கையில் தொடர்ச்சியாக அமைந்த அரசுகள் இனங்களின் ஜனநாயகக் கோரிக்கைகள் இவ்வாறு அரச வன்முறை மூலம் ஒடுக்க எடுத்த முயற்சிகள் உள்ளக சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையின் அவசியத்தை உணர்த்துகின்றன. கடந்த பல ஆண்டுகளாக தமது ஜனநாயக உரிமைகளுக்காக இத் தேசிய இனங்கள் போராடிய போதும் இது ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என சர்வதேச அரசுகள் தட்டிக் கழித்தன . இவ்வாறான பின்னணியிலேயே உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை நாம் ஆராய்தல் வேண்டும். கடந்த ஆண்டு (2002) நவம்பர் மாதம் ஒஸ்லோவில் இடம் பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போது உள்ளக சுயநிர்ணய உரிமைத் தத்துவங்களின் அடிப்படையில் சமஷ்டி வடிவத்தில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகங்களில் ஐக்கிய இலங்கைக்குள் ஓர் தீர்வைக் கொண்டுவர ஆய்வை மேற்கொள்வதாகக் கூறி உலகின் பல நாடுகளுக்கு பலரும் சென்றனர். இவ்வாறான தீர்மானம் ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தவும். மறுபுறத்தில் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவும் எடுத்த முயற்சியாகவே உள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போது விடுதலைப்புலிகளால் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த இடைக்கால நிர்வாகம் தமது கைகளில் ஒப்படைக்கபட வேண்டும் என்பது அவர்களின் நிபந்தனையாகவும் இருந்தது. ஏற்கனவே விடுதலைப்புலிகளின் கெடுபிடிகளால் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்த முஸ்லிம் மக்கள் இவர்களின் கைகளில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டால் தமது எதிர்காலம் பாதிக்கப்படலாம் என அச்சமடைந்தனர். இதன் காரணமாகவே தமது நலன்களைப் பாதுகாக்க முஸ்லிம் மக்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளை உள்ளடக்கியதன் அலகு ஒன்றைத் தருமாறு அம்மக்களின் அரசியல் தலைமை கோரிக்கை விடுத்தது. தனியான நிர்வாக அலகுக்கான கோரிக்கைகள் முன்னர் வைக்கப்பட்டிருந்த போதிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியதும் இக்கோரிக்கை வலுத்தன. வடக்கு . கிழக்கு மாகாணங்க்ள் தமிழர் தாயகமெனில் அவை முஸ்லீம் மக்களின் தாயகங்களுமாகும் என வற்புறுத்தப்பட்டது.

உள்ளக சுய நிர்ணய உரிமைத் தத்துவங்கள் குறித்து ஏற்கனவே விபரித்துள்ளேன். ஜனநாயகம். அபிவிருத்தி. மனித உரிமை என்பன அதன் அடிப்படைக் கட்டுமாணங்கள் எனவும் குறிப்பிட்டேன் இந்த அடிப்படைக் கோட்பாடுகள் தற்போதைய உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளில் காணப்படவில்லை. குறிப்பாக தமிழர்களின் அரசியல் தலைமையினை எடுத்துக்கொண்டால் அங்கு ஜனநாயக கருத்துப் பரிமாறலுக்கு இடமே இல்லை. ஆயுதப் போராட்டத்தின் பிரதான காரணியாக இவ் அமைப்புக் காணப்படுவதால் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கான குற்றச் சாட்டுகளையும் சுமந்து வருகிறது. தொடர்ந்தும் பல குற்றச்சாட்டுகள் சர்வதேச அமைப்புகளினால் சுமத்தப்பட்டு வருகிறது . சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக மனித உரிமை அடிப்படைகளை மறுக்கும் அதே நேரத்தில் எந்த விதமான மக்கள் சம்மதமும் அதாவது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழிகளில் மக்களின் சம்மதத்தினை பெறாமல் தம்மைத் தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக பிரகடன்ப்படுத்தி வருவதோடு மக்களின் வாக்குரிமையால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் செயற்பாட்டை ஒடுக்கியும் வருகிறது. இதற்கு உதாரணமாக தற்போது ஆனந்த சங்கரி அவர்களுக்கு நேர்ந்துள்ள பிரச்சினையைக் கொள்ளலாம். இது மக்களின் இறைமை அதிகாரத்தினை மீறும் செயலாகும்.

இவ்வாறான ஓர் அமைப்பு ஜனநாயகத்தின் பேரால் உள்ளக உரிமையைக் கோரும்போது அவர்களால் அந்த ஜனநாயகம் நிலைத்து நிற்க முடியுமா? என்ற கேள்வி ஒரு புறமும் மறுபுறத்தில் அந்த உள்ளக சுயாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் கிடைக்கும் உரிமையில் தமக்கான பங்கினைக் கோரி முஸ்லிம் அரசியல் தலைமை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இச் செயற்பாடு முஸ்லிம் அரசியல் தலைமை உள்ளக சுயாட்சி தொடர்பாக கொண்டுள்ள நம்பிக்கையை சந்தேகத்திற்குரியதாக்குகிறது. ஜனநாயக உரிமை மீறல். மனித உரிமை மீறல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள அமைப்புடன் பேச்சு வார்த்தை நடத்துவதனால் அவ்வாறான மீறல்களை அங்கீகரித்துச்செல்வதாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

(தொடரும்...)

# அரச காணி இல்லை என்பதற்காக மருதமுனை புறக்கணிக்கப்படுமா?


சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முதன்மையானது மருதமுனை என்பதை நாடே அறியும். இருந்த போதிலும் சுனாமி ஏற்பட்டு நான்கு மாதங்களைக் கண்டு நாட்கள் நகர்ந்த போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைப்பதில் இன்னும் உறுதியான தீர்மானங்கள் இன்றி அரசும். அரசியல்வாதிகளும் தடுமாறுகின்றனர்.

மருதமுனையை எடுத்துக்கொண்டாலும் கிழக்கில் கடலும் மேற்கில் குளமும், வயல் நிலமும் உள்ள ஒரு கிலோ மீற்றர் பிரதேசமும் தெற்கில் பாண்டிருப்பும். வடக்கில் பெரிய நீலாவணை எனும் தமிழ்க் கிராமங்களை எல்லைகளாகக் கொண்ட 1 1/4 கிலோ மீற்றர் தூரத்தினைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு சுனாமிக்கு முன்னர் சுமார் 30 ஆயிரம் மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வந்தார்கள். இதில் சுனாமி பேரலை சுமார் 1500 க்கும் அதிகமானவர்கள் சுவீகாரம் எடுத்துச் சென்றுவிட்டது.

கிழக்கிலுள்ள கடல் பிரதேசத்திலிருந்து நாநூறு மீற்றர் மேற்கு நோக்கியதான எல்லைகளிலிருந்து அனைத்து வீடுகளும் முற்றாகவும் பகுதியாகவும் மருதமுனைப் பிரதேசத்தில் மட்டுமல்ல அயலில் உள்ள கிராமங்கள் அனைத்திலும் கடல் பேரலையினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான வீடுகளும், சொத்துக்களும் மருதமுனையில் இழக்கப்பட்டுள்ளன. இதனை ஈடு செய்ய முடியாத போனாலும் முடிந்த வரையான, நிவாரணங்களம் வழங்கப்பட்டு வருகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களாலும். அரசாலும் இவ்வாறு நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் பாதிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு மிக அவசியமான தற்காலிக வீடுகள், நிரந்தர வீடுகள் அமைப்பதில் இன்னுமே தெளிவில்லாத இழுபறி நிலையே தென்படுகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள தனிநபர்களுக்குச் சொந்தமான காணிகளில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு



எம்.எல்.எம். முஸ்தபா
மருதமுனை

வருகின்றபோதிலும் இம்மக்களுக்கான நிரந்தரமான வீடுகள் அமைப்பதில் பாரிய பிரச்சினைகள் இருப்பதாகவே அறியமுடிகின்றது. அதாவது நூறு முதல் இருநூறு மீற்றர் எல்லைக்குள் குடியிருந்தவர்களுக்கு மாற்று இருப்பிட வசதிகளை நிர்மாணிக்க இப்பிரதேசத்தில் அரச காணிகள் இல்லை என்ற காரணம் முதல் காரணமென சொல்லப்படுகின்றது.

உண்மையில் இம்மக்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கம் இப்பிரதேசத்தில் இருக்கும் அரசியல் வாதிகளுக்கு இருக்குமாக இருந்தால் இவ்வேளை எவ்வளவோ வேலைகள் நடந்து முடிந்திருக்கும். காணியில்லாத மக்களை விட்டு விட்டு காணி இருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டிருக்கலாம். எல்லாவற்றையும் அரச அதிகாரிகளின் பொறுப்பில் விட்டுவிட்டு உறங்கிவிட்டனர் நமது அரசியல்வாதிகள்.

ஆயிரக்கணக்கான வீடுகளை மக்கள் இழந்து அகதிகளாக கடும்வெயிலிலும். குளிரிலும் புழுக்களாகத் துடித்து சீலைக்கூடாரங்களிலே அல்லல்படுகின்றவேளை தற்காலிக வீடுகளைக்கூட அரச சார்பற்ற நிறுவனங்களே பெரும்பான்மையாக அமைத்துக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். எமது அமைச்சர்களின் சார்பில் சில தற்காலிக வீடுகள் அமைத்துக்கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.. தனியார் நிறுவனங்களுக்கு இருக்கும் அக்கறை மக்களின் வாக்குகளால் பதவி சுகம் அனுபவிக்கும் அமைச்சர்களுக்கு இல்லவே இல்லை என்பது இதன் மூலம் புரிகின்றது.

எனவே காணி இருக்கும் மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்கள் அமைத்துக்கொடுக்காத இந்த அமைச்சர்கள் காணியற்றிருக்கும் மக்களுக்கு எப்படி நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கப்போகின்றனர்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் ஏற்கனவே மருதமுனை என்றால் 'வேம்பாக' கசக்கும் இந்த அமைச்சர்களுக்கு இன்று அரச காணியில்லை என்ற விடயம் உள்ளூர சந்தோசத்தைக் கொடுக்கச் செய்யும். ஏனென்றால் காணியில்லை என்று சொல்லி தட்டிக்களித்துவிட்டு தப்பித்துக்கொள்ளலாம் என்று. இப்படி இந்த அமைச்சர்கள் நடந்து கொண்டால் இதை விட சமூக துரோகம் வேறொன்றும் இருக்க முடியாது. எனவே தமது கடமைகளை அவர்கள் சரிவரச் செய்ய வேண்டும்! தட்டிக்கழிக்கக் கூடாது!

## மன்றாடுகின்றோம்!

கடலே நீ வற்றிவிடு
எங்கள்
கண்ணீர்த் துளி சேர்த்து
புதுக் கடலொன்று படைப்போம்.

கணத்துக் கொண்டிருக்கும் - எம்
மனத்தின் ரணங்களை
உன்னலை கொண்டு அழித்திடு...

அன்புடையோனே
இறைஞ்சுகின்றோம் இரு கையேந்தி
மண்ணகப் பிழையை நீ
மன்னித்தருளவே

பேரலை(யே) கொண்ட கடலே
நீ போயே விடு
எம் கண்ணீர்த் துளிகள் போதும்
புதுக் கடலொன்று படைக்க

ஜே. முஸ்பிகா - மூதூர் -01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரிசுடனான பேட்டியின் தொடர்...

*கே. நீங்கள் குறிப்பிட்டது உங்களுடைய கருத்து; தேசிய முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அமைச்சர் அதாஉல்லா போன்றோர் இந்த விடயங்களில் எதுவுமே பேசுகிறார்கள் இல்லையே இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்...?*

ப. இந்தக் கேள்வி நான் சந்திக்கின்ற அனைவராலும் கேட்கப்படுகின்றது. இந்த வினாக்கான விடையினை நான் மீண்டும் கூறுவதாக இருந்தால், அதாஉல்லா இன்று உண்மையிலேயே ஒன்றும் பேசுவதில்லை என்ற விடயத்தைத்தான் கூறலாம். அவர் ஐ.தே.கட்சி காலத்தில் முஸ்லிம்களுக்கு எதுவும் கிடைக்கவில்லையென்று போராட்டம் கூட நடாத்தியிருந்தார். ஆனால் இன்று துரதிஷ்டமாக மௌனமாக இருக்கின்றார். இது சம்பந்தமாக நான் அவருக்கு பல முறை அதிருப்தியுற்று கடிதங்கள் எழுதியிருக்கிறேன். இது சம்பந்தமாக ஊடகங்களுக்கு நான் பல முறை அவரது நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் கூறியிருக்கின்றேன்.

*கே. சுனாமிக்கு பிறகு மீண்டுமொரு அச்சுறுத்தல் பொத்துவில் உல்லைப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்றது. பொத்துவிலை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகோதரர் அசீஸ் அவர்களும் நீங்களும் இணைந்து அண்மையில் ஒரு பத்திரிகையாளர் மாநாடும். நடாத்தியிருந்தீர்கள். முஸ்லிம்களுடைய மிகப்பெரும் பிரச்சினை நில ஆக்கிரமிப்பு பிரச்சினை. இது சம்பந்தமாக உங்களுடைய அரசியல் தலைமை ஏன் மௌனமாக இருக்கின்றது?*

ப. உண்மையில் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கம், ஹெல உருமய கொழும்பில் நாங்கள் எதிர்பார்க்காத அளவில் பௌத்த பிக்குகளை கொண்ட பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது. உண்மையிலே இந்தளவு பௌத்த பிக்குகளை முஸ்லிம்களுக்கு எதிராக அணிதிரட்டினார்கள் என்பது எங்களுக்கு மிகவும் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. எனவே இது வடகிழக்கிற்கு வெளியே இருக்கின்ற முஸ்லிம்களைப் பொறுத்தமட்டிலும் பெரும் ஆபத்தான விடயமாகவும், வடகிழக்கிற்குள்ளே இருக்கின்ற முஸ்லிம்களுக்கு பெரும் அச்சுறுத்தலான விடயமுமாகும். எனவே பொதுவாக இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக சிங்கள மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம் வரக்கூடாது என்பதற்காகவும், பொத்துவிலின் உண்மையான நிலைமை பற்றி தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காகவே அந்த பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி அங்கு நடக்கின்ற விடயங்களை, அதாவது முஸ்லிம்கள் பௌத்த விகாரைக்கு குண்டு வைக்கிறார்கள். முஸ்லிம்கள் சிங்களப் பொலிசாரை சுட்டுக் கொல்கின்றார்கள், முஸ்லிம் தீவிரவாத அல்-கைதா இயக்கம் உருவாகின்றது என்கிற இந்த குற்றச்சாட்டுகளை முற்றாக மறுதலித்து நடந்த உண்மையான விடயத்தை நாங்கள் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தோம்.

*கே. உங்களுடைய பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்ற ஓரிரு தினங்களுக்குள் பத்திரிகையாளர் மாநாட்டை காரணம் காட்டி, உங்களை கட்சியிலிருந்து விலக்குவதாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அப்படியானால் உங்களுடைய தலைமை மக்களின் பிரச்சினைகளை வெளியில் தெளிவுபடுத்த உடன்பாடு இல்லையா?*

ப. நான் இந்த இடத்தில் ஒரு விடயத்தை தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். என்னை கட்சியிலிருந்து விலக்குவதற்கு வேறு எவருக்கோ உரிமை இல்லையென்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். என்னை இடை நிறுத்துவதாக கூறியிருக்கின்ற ஹமீடை கட்சிக்குள் குழப்பத்தையும் பிளவையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றார் எனக்கூறி நான் அவரை எனக்கு யாப்பில் உள்ள அதிகாரத்தின் படி இடைநிறுத்தியுள்ளேன். இதனை பார்க்கின்ற போது இது கட்சியில் உள்ள சில முக்கியஸ்தர்களின் தூண்டுதலின் பேரிலே இந்த அறிக்கையினை சகோதரர் ஹமீட் விட்டிருக்கின்றார். அவர் அமைச்சர் அதாவுல்லா அவர்களின் றெப்பியா நிறுவனத்தின் தவிசாளராக இருக்கின்ற படியால் அவர் இதனை செய்திருக்கலாம். ஆனால் அதாஉல்லாவுக்கு தெரிந்தே இது நடந்திருக்கின்றது. நீங்கள் கூறுவதைப்போன்று இந்த விடயம் நாங்கள் பொத்துவில் பிரச்சினையைக் கையாண்ட படியால் எங்களை, மௌனமாக்கின்ற நடவடிக்கையாக இவர்கள் இதனைச் செய்திருக்கிறார்கள் என்று தான் கொள்ள வேண்டியிருக்கின்றது.



பொத்துவிலில் ஏற்பட்ட சிங்கள மக்களின் நடவடிக்கை மற்றும் தேசிய அளவில் ஹெல உருமயவின் நடவடிக்கைகளை கண்டித்து நாங்கள் குரல் கொடுக்கின்ற போது. இவ்வாறான அறிக்கைகளை விடுப்பதன் மூலம் எவ்வாறு எங்களை கட்டுப்படுத்த முடியுமென அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சகோதரர் அஸீஸ் பொத்துவில் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர். அவரை போசாது இருக்கும் படி சொல்வதற்கு அதாஉல்லாவுக்கு என்ன உரிமை இருக்கிறது?

என்னைப் பொறுத்தமட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் முஸ்லிம் இனத்துவ அரசியலில் சரியாக பங்களிப்புச் செய்யவில்லை. சரியான போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. முஸ்லிம்களுடைய பிரச்சினை சரியாக அடையாளப்படுத்தப்படவில்லையென்பதற்காகவே வடகிழக்கைச் சேர்ந்த இனத்துவ அரசியலில் அக்கறையுள்ளவர்கள் என்று கூறிக்கொண்டவர்கள் மாற்று சக்தியாக முஸ்லிம்களுக்கு தலைமை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் தேசிய முஸ்லிம் காங்கிரசை உருவாக்கினோம். முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்திற்கு உறுதுணை வழங்க வேண்டும் என்ற தொனியில் வந்தவர்களே முஸ்லிம்களுக்கு எதிராக அநியாயம் நடக்கின்ற போது மௌனமாக இருப்பதை, செயற்படுகின்றதை பார்க்கின்றபோது அவர்களுக்கும் முஸ்லிம்காங்கிரஸிற்கும் எந்த வித்தியாசமுமில்லை என்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே என்னைப் பொறுத்தமட்டில் இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்கள் ஒரு மாற்று சக்தி எனக்கூறிக் கொண்டவர்களால் முஸ்லிம்களின் இனத்துவ அரசியலை சரியான முறையில் கையாளமுடியவில்லை என்பதனால் இவர்களாலும் முடியாது என்ற நம்பிக்கையும் எடுகோளும் இன்று முஸ்லிம்கள் மத்தியில் வந்துள்ளது. எனவே முஸ்லிம் அரசியல் என்னைப் பொறுத்தமட்டில் இன்னும் ஓரிரு வருடங்களில் புதியதொரு பரிணாம வளர்ச்சியில் காலடி வைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இன்று சிங்கள தேசிய அரசியலில் ஜே.வி.பி. போன்ற மூன்றாம் சக்திகள் எவ்வாறு உருவெடுத்துள்ளதோ அதே போன்று இன்னும் குறிப்பிட்ட காலத்திற்குள் முஸ்லிம்களுக்குள் ஒரு தேசியவாத அரசியல் உருவாகலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

*கே. அதாஉல்லா தலைமையில் உருவாக்கிய மாற்று அணி தோல்வியடைந்து விட்டதாகவா நீங்கள் கூறுகின்றீர்கள்?*

ப. மாற்று அணி என்ற அடிப்படையில் அதாஉல்லா தலைமை கொடுத்த அந்த விடயம், முற்று முழுதாகவே இப்போதைய அரசாங்க காலத்தில் சரியாக செயற்படவில்லையென்று நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதாவது முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் அவர்கள் எதிர்நோக்குகின்ற பொதுக்கட்டமைப்பு, சுனாமி நிவாரணங்கள் மற்றும் பொத்துவிலில் ஏற்பட்டுள்ள முஸ்லிம்களுடைய பிரச்சினைகள், சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வேண்டும் போன்ற விடயங்களை அமைச்சர் அதாஉல்லா அவர்கள் சரியாக கையாளவில்லை. இதனால் மாற்று சக்திகள் மீது முஸ்லிம்கள் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விடுவார்கள் என்ற அச்சமேற்பட்டுள்ளது. நிச்சயமாக அதாஉல்லா இந்த விடயத்தில் தோல்வியடைந்துவிட்டார்.

*கே. இன்று உங்கள் கட்சியின் முரண்பாடுகளை களைவதற்கு பேச்சுவார்த்தை முயற்சியை ஏற்படுத்தி அடுத்த கட்ட நகர்வு குறித்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையா?*

ப. அதாஉல்லா இந்த பிரச்சினையை எவ்வாறு கையாளப்போகிறார் என்பதை நான் அவரிடமே விட்டுள்ளேன். ஏனென்றால் என்னைப் பொறுத்தமட்டில் கட்சியினுடைய கட்டுக்கோப்பு; கட்சியினுடைய அதிகாரம் பற்றி பேசுவதற்கு கட்சியினுடைய செயலாளர் நாயகம் என்ற வகையில் அதாஉல்லா என்னையே நாடவேண்டும். இது சம்பந்தமாக எந்த விடயத்திலும் கீழே இறங்கி பேச வேண்டிய அவசியம் எனக்கில்லை.

*கே. இன்றைய நிலையில் எதிர்காலத்தில் எப்படி உங்களது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் எனக் கருதுகிறீர்கள்? உங்களது எதிர்கால வேலைத்திட்டம் பற்றி விளக்க முடியுமா?*

ப. என்னுடைய வேலைத்திட்டம் எனக் குறிப்பிடும் போது வட- கிழக்கு இனத்துவ அரசியலை அஷ்ரப் அவர்களுடைய மறைவுக்குப் பின்பு. புதிய பரிணாம வளர்ச்சிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற அவா நான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்தே எனக்குள் இருந்து வந்தது. துரஷ்டவசமாக இப்போது பாராளுமன்ற உறுப்பினராக நான் இல்லாத போதிலும் கூட, அந்தப் பிரச்சினைகள் நமது மக்களின் உரிமைகள் எந்த இடத்திலும் விட்டுக்கொடுக்கப்படாததாக இருக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். அதற்கான அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது எண்ணம்.

எனவே இந்த எண்ணத்தைக் கொண்ட நாங்கள், தேசிய அரசியலில் அமைச்சுப் பதவிகளுக்காகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை உருவாக்கி எடுக்கும் அந்த அரசியலை விட்டு விட்டு மக்களுடைய பிரச்சினைகளுக்கு முன்னுரிமைப்படுத்தி, குறிப்பாக இனப்பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுப்பதனாலேயே நாங்கள் அடிக்கடி இந்த முஸ்லிம் தலைமைகளுடன் முரண்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். றவூப் ஹக்கிமுடனும் இந்த விடயத்தில் தான் நான் முரண்பட்டேன்.

இது உண்மையில் என்னுடைய பிரச்சினையல்ல. பொதுவாக நான் பார்க்கின்ற போது முஸ்லிம் தலைமைகள் அதிகாரத்திற்கு வருகின்ற போது அவர்களுடைய கொள்கைகளை மாற்றுகின்ற போது; எங்களுக்கும் தலைமைகளுக்கும் பிரச்சினை ஏற்படுகின்றது. ஏனென்றால் எங்களால் அரசுடன் இணங்கிப்போகின்ற அந்த காட்டிக்கொடுப்பு அரசியலை செய்ய முடியாது. நிரந்தரக் கொள்கையுடன் நாங்கள் அரசியல் செய்வதால்; இப்படியான சந்தர்ப்பவாத அரசியலை எங்களால் செய்ய முடியாதுள்ளபடியால் தான் இப்படியான பிரச்சினைகளை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். யாரையும் அமைச்சராக்கி அழகு பார்ப்பதற்காக நாங்கள் அரசியலுக்கு வரவில்லை. நாங்கள் மக்களுக்காக போராடுவதற்கே அரசியலுக்கு வந்துள்ளோம்!

## கல்முனை வலய தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கைகள்!

கல்முனைக் கல்வி வலயத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி, நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியும், நியமனம் வழங்கப்படாதுள்ள தகைமையுடைய தொண்டர் ஆசிரியர்களுக்கு பாரபட்சமின்றி நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்!

1985, 1989, 2004 ஆகிய மூன்று சுற்று நிருபங்களின்படி தகைமையுடைய தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படல் வேண்டும். விடுபட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை ஒன்று நடத்தப்படல் வேண்டும். மே மாதம் நடை பெற உள்ள நேர்முகப்பரீட்சைகள், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் வேண்டுகோளின் படி பின் போடப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிடின் தமது கோரிக்கைகளை முன்வைத்து வடக்குக்கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் தொழிற்சங்கப்போராட்டத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளதாக, கல்முனை கல்வி வலய தொண்டர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எஸ். அஷ்ர.்ப் கான்
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பாடசாலைகளை சிறந்த கல்விக் கூடங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்!



அந்நிய மதத்தவர்களின் பாடசாலைகளுக்குச் செல்லும் முஸ்லிம் மாணவிகளுக்கு அதன் அதிபர்கள் பர்தா அணிந்து வரவேண்டாம் என நிர்ப்பந்திக்கின்றார்கள். எமது கலாசாரமும் அவர்களின் கலாசாரமும் ஒன்றுக்கொன்று நேர்மாற்றமானது. ஆகையினால் எமது கலாசாரப் பண்புகளை விட்டுக்கொடுத்துவிட்டு அங்கு கல்வி கற்கச் செல்ல முடியாது. முஸ்லிம்களாகிய எமக்கு அன்றாட வாழ்க்கையில் பிறந்தது முதல் கப்ர் செல்லும் வரை உணவு, உடை, வணக்க வழிபாடு, ஹலால், ஹறாம், சுன்னத்து, பர்ளு, வாஜிபு, சுத்தம் எது, அசுத்தம் எது, நல்லது எது, கெட்டது எது, நல்லொழுக்கம் போன்ற சகல விடயங்களிலும் நாம் அவர்களுக்கு மாறுபட்டவர்கள் இந்த நிலையில் நாம் அவர்களின் பாடசாலைகளுக்கு நமது மாணவ மாணவிகளை அனுப்புவது தவறான செயல் என்று கருதுகின்றேன்.

ஆகையினால், எமது பாடசாலைகளை சிறந்த கல்விக் கூடங்களாக மாற்ற உலமாக்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள், அறிஞர்கள், தாய் தந்தையர்கள், நலன் விரும்பிகள் ஒன்று சேர்ந்து ஒரு ஒழுக்கக் கோர்வையொன்றை உருவாக்கி அதன் சுற்று நிருபங்களை நாட்டில் உள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளினதும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு அனுப்பினால் அதன் படி செயல்பட நடவடிக்கை எடுக்கலாம். அதாவது பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும். பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களில் உள்ள குறைபாடு, அதிபர் உட்பட சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உள்ள பொறுப்புகள் சம்பந்தமாக அறிவுறுத்தல் எமது கலாசாரப்படி எல்லா மாணவ மாணவிகள் ஆசிரியர்கள், ஆசிரியைகள், பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.
லுகர் தொழுகைக்கான வசதி செய்து கொடுக்க வேண்டும்.பள்ளி யில் அல்லது பாடசாலையில் விளையாட்டு த் துறை உட்பட சகல துறையிலுமுள்ள குறைபாடுகளையும் ஆசிரியர் குறைபாடுகளையும் உடனுக்குடன் கண்காணித்து நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.


ஏ.எல்.யூ . ரமீஸா - நாம்பாவெல

# காசநோய்




உலகின் மிகப்பெரும் பயங்கர கொள்ளை நோயே காச நோயாகும். இப்போது உலக மாந்தரை மிக வேகமாக பலியெடுக்கும் இராட்சதனாக இந்த நோய் உருப்பெற்றுள்ளது.

பல காலமாக வெற்றிகரமான முறையில் பயன்படுத்தப்பட்ட மருந்துகளுக்கு தாக்குப்



பிடிக்காத காச நோய் மாதிரிகள் உருவானதன் காரணமாக. இந்நோயினை சுகப்படுத்த முடியாத நோயாக அச்சுறுத்தல் தரும் விதத்தில் தலை தூக்கயுள்ளது. பன்முக மருத்துவ நிலையிலுள்ள காச நோய்க்கு (MDR-TB) ஆளானோர் 510 இலட்சம் பேர் உள்ளதுடன். இவர்களிடமிருந்து இந்த நோய் மாதிரியானது நிறுத்த முடியாத நோயாக ஏனையோருக்கிடையில் பரப்பப்படுகிறது.

உலக சுகாதார அமைப்பினால் (WHO) காச நோயானது 'உலகமய அவசர நிலையாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட உலகின் ஒரே நோய் இதுவாகும். அபிவிருத்தியடைந்து வரும் உலகில் இந்நோயானது கட்டுப்படுத்தக்கூடிய நிலையினைத் தாண்டிப் போவதுடன். காச நோயினால் உலகில் நடைபெறும் மரண எண்ணிக்கையில் 80% மானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே அதிகமானோர் பலியாகியுள்ளனர். மூன்றாம் உலக நாடுகளிலிருந்து மக்கள் மேற்கு நாடுகளுக்கு இடம்பெயர்வதன் காரணமாகவே இந்நோய்க்கு அதிகம் ஆளாகியுள்ளனர்.

காசநோய்க்கு பலியாகும் மக்களுள் 75% சதவீதமானோர் 15 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்டவர்களாகவே உள்ளனர். இந்த கணக்கெடுப்பின் படி இந்நோய் காரணமாக பாரிய சமூகப் பொருளாதார செலவினைத் தாங்க வேண்டியுள்ளது கண்கூடு. ஏனெனில், இக்கால கட்டத்தில் குடும்பத்தை பராமரிக்கும் குடும்பத்திற்காக வருமானத்தைத் தேடுவோர் இந்நோயினால் பாதிக்கப்படுவதன் காரணமாக வருமானத்தின் வழி அடைபடுகிறது.

சாதாரண நிலையிலுள்ள காசநோயினை குறிப்பிடத்தக்க அளவில் சுகப்படுத்த முடியும். இந்நோய்க்கு சிகிச்சை வழங்கும்போது பின் விளைவுகள் மிகவும் குறைவானது என உறுதிப்படுத்தப்பட்ட பலமான சில மருந்துகள் உள்ளன. 06 அல்லது 08 மாதங்களில் முறையாக வழங்கப்படும் சிகிச்சையினால் இந்நோயினை பூரணமாக குணப்படுத்த முடியுமென கூறப்படுவதுடன். நோய் பரவுவதனையும் தடுக்க முடியும். 02 வாரங்கள் போன்ற குறுகிய காலத்தில் வழங்கப்படும் வெற்றிகரமான சிகிச்சையின் மூலம் நோயாளியிடமிருந்து வேறு ஒருவருக்கு இந்நோய் பரவுவதனை தடுக்க முடியும்.

முக்கியமாக, புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்றப்படும் BCG ஊசி மருந்தின் மூலம் இந்நோய் பரவுவதனை தடுப்பதற்கும். குறைப்பதற்கும் முடியும்.

நேரடி கண்காணிப்பு சிகிச்சை முறை (DOTS) மூலம் இந்நோய்க்கு எதிராக போரிடுவதற்கான மிகவும் வெற்றிகரமான, இலாபகரமான முறையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும், மருந்துகளுக்கு இயைவாக்கமுள்ள காச நோய்க் கிருமிகளின் உருவாக்கம் காரணமாகவும், எய்ட்ஸ் நோய் காரணமாகவும் இந்த நோயினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் பற்றிய அச்சம் மீண்டும் விருத்தியடைந்து வருகிறது. மக்களுக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்துவதே காச நோய் ஒழிப்புக்கான பிரதானமான விடயமாகும்.

# பாலருந்து பொழுது...

முள்வேலி படர்ந்து
நெஞ்சுள் காய்காய்க்கும் நேரம்
கள்ளிப் பற்றைக்குள்
கால் சறுக்கி விழுந்து...
மூச்சுத் திணறி மூழ்கி...

அந்தப் புல்லாங்குழல் இன்னும்
ஊதாமலே கிடக்கிறது

விடிவதற்குள் நீங்கள்
கள்ளிப் பால் தந்து
மகிழ்ந்திருக்கலாம்...

அல்லால்
காய்ச்சிய இரும்பால்
உடலங்களில்
துளையிட்டிருக்கலாம்...

உன் அறிவிப்பு
இதைவிடக் கொடூரம்...

தேநீர் பருகி வாடை
ஆறவில்லை;
படலிடுக்குள் என் பசு
வந்து சேரவில்லை;
அதற்கிடையில் நீ...

பலாப் பிசின் போல்
ஒட்டிய என் மகவுகளை
பாலருந்து பொழுதில்
பிரித்தாயே!

நெல்லிக் கனி உண்டு
நீர் குடிக்குமுன்...
புணரும் என் காளையின்
புணர்ச்சி தணிவதற்குள்...
உன் அழைப்பு
அகோரம் நிறைந்தது.

நெற்றியில் நீ திலகம்
இடக்கிடைத்த நேரம்
பூமியில் நான்
விழக்கிடைக்கவில்லையே.

கும்மிருட்டு;
மோதி விழுந்து என்
முழங்கால் சில்லுடைந்து...
பன்றிக் காட்டுக்குள் புகுந்து;
பசி மறந்து...
தேனீ கொட்டி...
என் பெரியப்பா இடையில்
போய்ச் சேர்ந்து...
கண் குருடாகி;
காணாமல் போய் நாங்கள்...

உங்கள் குரல்
உலகமெல்லாம் ஒலித்தனவே!

அரவங்கள்,
கக்கிப் போட்ட விஷங்களை
நாங்கள் அருந்தாமல் போனது
உங்களுக்கு அது
ஆச்சரியம் தான்...

பட்ட மரங்களையா
மீண்டும்
போதிக்க அழைக்கின்றாய்
போ!
ஒரு பறவை கூட நில்லாது!!


றிஸ்வி யூ முஹம்மது நபீல்
கல்முனை

# கந்தளாய் அல்-தாரீக் மகாவித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறு!

சமீபத்தில் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி கந்தளாய் அல்-தாரீக் மகாவித்தியாலயம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று. கந்தளாய் வலய தமிழ் மொழிப் பாடசாலைகளுள் முன்னணியில் திகழ்கின்றது. இம்முடிவுகளின்படி 80 சதவீதத்திற்கும் அதிகமானோர் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்பதற்கு தகுதி பெற்றிருப்பதாக அதிபர் வி.செய்னூல் ஆப்தீன் தெரிவிக்கின்றார்.

கந்தளாய் செய்தியாளர் - எம்.எப். முபாரக்

# வீதி அழுகிறது...!



மூதூர் பிரதான வீதியிலிருந்து ஆனைச்சேனைக்கு (சின்னப்பாலத்தினூடாக) செல்கின்ற பிரதான வீதி மணலால் அமைக்கப்பட்டுள்ளது. கிரவல் கூட போடப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால்; பிரயாணம் செய்வது மிகவும் சிரமமாக உள்ளதுடன்; மின்சார வசதியும் மிகக்குறைவாக உள்ளது. இவ்வீதியின் அழுகையால் பிரயாணிகளும் அழுவதாக தெரியவருகின்றது. எனவே, இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அதிகாரிகளே இது உங்களின் கவனத்திற்கு...!

(மூதூர் செய்தியாளர் - முஜீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# சங்கமம்

**வா**டைக்காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த தாழமுக்கத்தின் தாக்கம் கெட்டியாரக் குடாக் கடலையும் கொத்தளிக்கச் செய்தது. மப்பும், மந்தாரமுமாக இருந்த வானத்தை அன்னார்ந்து பார்த்த அனிபா நானா, மழைவராதென்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

வாடைக்காற்றுக்கு கடல் வாங்கல் கடுமையாகயிருக்கவும், தோணிகளும் வள்ளங்களும், சிறிய படகுகளும், இரண்டு, மூன்று நாட்களாக கடலுக்குப் போகவில்லை. சுருக்கு வலை, டிஸ்கோவலைகள் மூலம் மீன்பிடிக்கும் கிண்ணியா மீனவர்களின் ஒருசில படகுகள் தான் ஆழ்கடலில் அங்கொன்றும், இங்கொன்றுமாக, சின்னங்க மலைக்கும், பெரியங்க மலைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் சூரை மீனுக்காக ஓடிக்கொண்டிருந்தது.

புங்கை மரநிழல் கிழிந்து போன வலையை அள்ளிப் போட்டுக்கொண்டு, பீத்தல்களைப் பார்த்து, பொத்தி தைத்துக்கொண்டிருந்த அனிபா நானா, பக்கத்தில் வள்ளத்தின் ஓட்டைக்கு ஒட்டுப்போட்டு அடைத்துக் கொண்டிருந்த அப்துல் காதரைப் பார்த்து, தம்பி காதர் அங்கப்பாருடா லோஞ்சி (பயணிப்படகு) பட்டுப்போற பாட்டையென்றார்.

காலை பதினொரு மணிக்குப் புறப்படும் பயணிகள் படகு (லோஞ்) மூதூர் இறங்கு துறையிலிருந்து, திருகோணமலையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. கோடைக்காற்றுக்கு பொங்கி உயர்ந்துவரும் பேரலைகளுக்கு மேலெழுந்தும், தாழ்ந்தும், சரிந்தும், அந்தச் சிறிய படகு மெல்ல... மெல்ல ஓடிக் கொண்டிருந்தது.

லோஞ்சையோ இமைக்காது பார்த்துக்கொண்டிருந்த காதர், பழைய லோஞ்செண்டு ஆக்களக் கொறச்சா ஏத்துறனுவென், வாறஆக்களையெல்லாம், ஏறுங்க...ஏறுங்க... உள்ளுக்குப் போங்கயெண்டு சொல்லி அள்ளி அடைச்சியல்லவா ஏத்திப் பேறானுவொன், காத்தும் கடலுமா இருக்கிது ஆக்களக் கொஞ்சம் கொறச்சி ஏத்திப்போவமெண்டு யோசிக்கிறானுவொனுமல்ல, உள்ளுக்கு இருக்கிர சனமெல்லாம், உரசிக் கையில புடிச்சிக்கிட்டுத்தான் நானா இரிக்கும். நம்ம என்னடா தம்பி காதர் செய்ரத. கரை சேரும் வரைக்கும் அல்லாட காவல்தான். நம்மட ஊர் பிரயாணமும் அப்பிடியில்லவா இரிக்கிது.

ரெண்டு, மூணு நாளைக்கு தொடர்ந்து மழை பேஞ்சிட்டுதெண்டா அல்லை கந்தளாய் ரோட்ட நெனச்சும் பாக்கேலாது. காட்டுத்தண்ணிவந்து உழுந்து ரோட்டயெல்லாம் ஒடைச்சிகிட்டுப் போகும். ரோட்டுல இடுப்புக்கு மேலால தண்ணி போவும், எப்பிடிடா பல் லொறி, வாகனமெல்லாம் வரும். இஞ்சால கடல் போக்குவரத்தும் இப்பிடியெண்டா என்ன செய்யிரது.

இந்த ஊருலையும் நாங்க வந்து பொறந்திருக்கிறம்; என்று சொல்லிப் பெருமூச்சு விட்ட அனிபா நானா; காதில் சொருகியிருந்த பீடியை எடுத்துப் பற்றவைத்து, இரண்டு, மூன்று டம் இழுத்து விட்டு இந்தாடா ரெண்டு இழுவ இழுவென்று சொல்லி காதரிடம் பீடியைக் கொடுத்தார்.

பீடியை வாங்கி ஒருதம் இழுத்து காதர், என்ன வீடி நானா இது, சின்னப்பொட்டைக்கிட்ட காசக்குடுத்து பைரோஸ் வீடி வாங்கிட்டு வரச் சொன்ன, என்ன வீடிய வாங்கிட்டு வந்திச்சோ தெரியாது. இப்பவாற வீடியெல்லாம் சரியில்ல நானா ரெண்டு இழுவையோட நூந்து போவுது.

ஆமெண்டா என்னடா ஊட்டுல சோத்துப்பாடு, காத்துப்பாடு, காலத்தால கஞ்சி காச்சிக் குடிச்சம் நானா, தொழிலுக்கெண்டு போய் நாலு நாளாப் போவுது. வள்ளமும் ஓட்டயாப் பெயித்து. தூரத் தொலையப் போவாம, கெங்கையப் பாக்கத்தான் போறது. பேனா ஒரு நூறு நூத்தம்பது ரூவாய்க்கி, செரி, செப்பலிக்குட்டி புடிக்கலாம். இந்த நாளையில கடலப் பார்க்கப் பயமாக்கெடக்குது. அரிசி தேங்காயெண்டு எல்லாச் சாமானும், காசீன்ட கடையில கடனாத்தான் வாங்கிறது.



மூதூர் ஜாபீர் - புத்தளம்

சின்னக் குல்லாக்கட வெச்சிக்கிட்டு தொழில் செய்யிரவங்கடபாடெல்லாம் இப்பிடித்தாண்டா காதர், என்ன நானா செய்யிரது கைமாத்தும், கால்மாத்தும் வாங்கி கடனும கூடிக்கிட்டுப் போவுது.

நானா நீங்க வாடிப்பக்கம் போய்ப் பார்த்தீங்களா? இல்லயடா என்னமோ பிரச்சினையா? பெரச்சினையெல்லாமில்ல நானா, அடிச்ச கடலுக்கு மீன்வாடி, தேத்தன்னிக்கடையெல்லாம், அள்ளிக்கிட்டுப்பெயித்து. தென்னமரம் உழுந்ததுல வள்ளம், போட்டெல்லாம் ஒடைஞ்சி போய்க் கெடக்குது.

விதானையாரும், மீன்பிடிச் சங்கத்தலைவரும், மீன்பிடிக் காரியாலயத்துல இருக்கிரவரும் , வந்து பார்த்து எழுதிக்கிட்டு போறாங்க.

எழுதிக்கிட்டுப்போய் என்னடா செய்யிரது. நானும், நேத்து, இன்னைக்கில்ல, அறுவத்தஞ்சி வரிசமா கடல் தொழில் தான் செய்யிறன். இப்பிடித்தான் கடல் அடிக்கிறதும், வள்ளம் ஒடையிரதும், வீடுவாசலக்கொண்டு போறதும்தான். விடிய விதானையார், சங்கத்தலைவர் மாரெண்டு எல்லாரும் வந்து பாத்து எழுதிட்டுப்போவாங்க. யாருக்கும் ஒழுங்கா நஷ்டஈடு கெடச்சிருக்கா சொல்லுடா.

இதுவரைக்கும் நம்மட மூதூர் தொகுதியிலயிருந்து எத்துன எம்பியும், எத்துன மந்திரியும், பாறுலிமண்டுக்கு போயிரிக்கிறானுவொள், ஆரெண்டாலும், இந்தக் கடல் அரிப்பப்பத்திபாறுலிமெண்டுல பேசியிரிக்கிறானா? எல்லாரும் அவன் அவன் ஒழைக்கிறத்துக்குத்தான், எலக்கிசன் வந்த ஒடன் எனக்குப் போடுங்க எனக்குப்போடுங்கயெண்டு கத்துறதெல்லாம், இவங்க வேலையெல்லாம் போய்ச்சு.

கிண்ணியா தோனாக் கடக்கரையிலிருந்து, கடக்கரச்சேன வரைக்கும் தென்னந்தோட்டமும், குடியிருப்புமா மூவாயிரம் ஏக்கறுக்குமேல அரிஞ்சி... அரிஞ்சி கடலோட கடலாப் பெயித்துது. ஒரு நாளைக்கு அடிக்கிர கடல் அஞ்சடி நெலத்த கொண்டுபோவுது. இதையெல்லாம் யாருபாக்குரது, யாருகேக்குரது, இப்பிடி அங்குலமும், அடியுமா, கரைஞ்சி, கரைஞ்சி ஹபீப் நகரும், தக்வா நகரும், வட்டமும், இந்தியாவுல பூம்புகார் அழிஞ்சமாதிரி, கடலோட கடலாப் போயிடும். நாங்க ஆளையாள் அடிச்சிக்கிட்டும், வெட்டிக்கிட்டும், அவனுக்குப்போடு இவனுக்குப்போடு, கதிரைக்கும் , யானைக்கும், மரத்துக்கும் ஓட்டுப்போட்டுக்கிட்டே இருப்பம்.

காதர் நீ சீவனோட இருந்தாப்பாரு இன்னம் அம்பது அறுவது வரிசத்துக்குள்ள கடல் ஊரியோடையோட சேந்துரும், இன்னம் அம்மது வருசத்துக்குமேல் இருப்பமெண்டு எப்பிடி அனிபா நானா சொல்லறது சமாதானப் பேச்சும் கொளம்பிக்கிட்டுக் கெடக்குது.

காதர் உறுதிப்பட ஒருசமாதானம் வந்தாத்தாண்டா நல்லம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒடம்படிக்கையெல்லாம் சரிவராதுடா நெரந்தரமான சமாதானம் வந்தாத்தாண்டா நம்மட அடுத்த சந்ததியெண்டாலும் சந்தோசமாக வாழும்.

என்ன அனிபா நானா வலையெல்லாம் நெறையப் பீத்தலாத்தான் இரிக்கி, எல்லாத்தையும் போட்டு நண்டு கடிச்சிப் பிச்சிப்போட்டுது ஒவ்வொரு நாளும் கைபாத்தா தாண்டா சரிக்கட்டியெடுக்கலாம். கதைச்சிக்கிட்டு இருந்ததில நேரம் போனதும வெளங்கயில்ல மலையில இருந்து ரெண்டு மணிக்குப் பொறவு வாற லோஞ்ச இன்னம் காணயில்லிய அனிபா நானா.

இப்ப லோஞ்செல்லாம அப்படித்தாண்டா காதர், பதினொருமணிக்கு போன லோஞ்சப்பாத்தாதான, என்ன பாடுபட்டுப் போயிச்செண்டு, எல்லாம் பழைய லோஞ்சி, நடுக்கடலுல பழுதாப் போயிரும்; கடல் அடிக்கிர தண்ணியும், மழத்தண்ணியும், உள்ளுக்குத்தான் அடிக்கும், கடல் வாங்கலுக்கு இருக்கையெல்லாம் ஏலாது. காதர் ஒண்ட புள்ளையள் யாரும் மலைக்கா போயிரிக்கி , ஓம் நானா மூத்த மகள் புள்ளத் தாச்சி, தலப்புள்ள மலையில பெரியாஸ்பத்திரியில ஒருதரம் காட்டிக்கிட்டு வாறது நல்லமெண்டு, மருமகன்தான் கூட்டிக்கிட்டுப் போயிருக்காரு. காத்துக்கடல், கொழப்பமான நேரம், சோனக வாடிக்குள்ள, சின்னக்கடப்பக்கமெல்லாம் போகாம காட்டிக்கிட்டு நேரத்தோட வந்துங்கயெண்டு சொல்லித்தான் அனுப்புனனான்.

ரெண்டு மணிக்குப் பொறவு வாறலோஞ்செண்டா இன்னேரம் பாதள மலையத்தாண்டி இரிக்கனும், லோஞ்சி பழுதாக்கும், கடைசியா அஞ்சிமணிக்கு வார லோஞ்சிலதான் வருவாங்க போல.

என்ன அனிபா நானா கிண்ணியா போட்டெல்லாம் பாதாள மலைக்கிட்ட வளைக்கிது. நேவி லோஞ்சும் வருவுது, கிண்ணியா போட்டொள்ளு தாண்டுட்டுபோல, இஞ்சால பாருங்க நானா ஜெற்றிப் பாலத்திலயும் சனங்களெல்லாம் கூட்டமா நிண்டு பாக்குது. வாங்க அனிபா நானா என்னண்டுபோய்ப்பாப்பம், என்று சொல்லிக் கொண்டு சாரனை உதறிக் கொண்டு எழும்பினான் காதர்.

என்னங்க இருக்கிரீங்க புள்ளயல்லாம் வந்த லோஞ்சி தாண்டுட்டுதாமே, என்று தலையிலடித்துக் கதறிக் கொண்டு வந்தாள், காதரின் மனைவி. சற்று நேரத்தில் தக்வா நகர் கடற்கரை மண்போட்டால் மண்விழாத அளவுக்கு சனத்திரளாகக் காட்சியளித்து. உடன் பிறந்தோரும் உறவினர்களும், ஊர்மக்களும் கதறி அழுதனர். ஊர் சோபையிழந்து சோகமாய் காட்சி தந்தது.

காதர் கடலோடு சங்கமமாகிப் போன மகளை நினைத்துக் கண்ணீர் வடித்தவனாக, மணற்திட்டியில் கிடந்தவனாய் பொங்கியெழும் கடலை வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

## சமாதான நீதவான்

**யா**ழ்ப்பாணம் சோனகத்தெருவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 10 மாளிகாவத்தையைப் வசிப்பிடமாகவும் கொண்ட, தற்போது விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் செயலாளரின் உதவியாளராகக் கடமையாற்றி வருபவருமாகிய எம்.எஸ்.எம். மலிக் (ஜமாலிக்) நீதி, நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சால் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.பீ.கே. ஏகரட்ன அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



## தொழுகையின் பயன்கள்!



**அ**ல்லாஹுத்தஆலாவுக்கு எல்லா வற்றையும் விட மிகப் பிரியமான அமல் உரிய நேரத்தில் தொழுகின்ற தொழுகையே ஆகும். ஒருவர் தொழ ஆரம்பிக்கையில் அல்லாஹ் அவர்பால் கவனம் செலுத்துகின்றான். அவர் தொழுகை முடித்துத் திரும் புகையில் அல்லாஹ் வும் தன் கவனத்தை திருப்பிக் கொள்கிறான். அல்லாஹ்வுக்கு மனிதன் நிலைகளில் எல்லாம் அவன் ஸஜ்தாவில் கிடந்து தன்னுடைய சிரசைப் பூமியில் வைத்துக் கொண்டிருக்கும் நிலையைக் காணவே அதிக விருப்பம். ஒருவர் ஒரு பர்ளுத் தொழுகையைத் தொழுதால் ஏற்றுக்கொள்ளத்தகும் ஒரு துஆ நல்கப்படுகின்றது. மனிதன் தொழ நின்றுவிடுவானாகில் இறைவனின் அருள் அவன் பக்கம் பொழியப்படுகின்றன. பூமியில் எந்தப் பகுதியில் தொழுகையின் மூலம் அல்லாஹ்வின் நினைவு கூரப்படுகிறதோ அப்பகுதி மற்றப்பகுதிகளைப் பார்த்து பெருமை பாராட்டுகிறது. மிகச் சிறந்த தொழுகை நடு நிசியில் தொழுவதாகும். சுவர்க்கத்தின் திறவுகோல் தொழுகையாகும்.

எம்.ஆர்.எம். சைபுல்லாஹ் கொழும்பு 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தன மரமொன்று சாக்கடையாகிறது!

பேரினவாத அரசியலின்
பின்னால்
வாய்மூடி மௌனிகளாய்
அட்டை போல் ஒட்டிக்
கொண்டிருந்த வேளை
பட்டை தீட்டிய வைரம் போல்
பளபளவென்று மின்னிய
தாரகை ஒன்று - இன்று
தாரை வார்க்கப்படுகிறது;
'தன்னை எரித்து
முழு உலகிற்கும்
ஜோதிபரப்பியவனின்
அஸ்தமனத்தின் பின்னால்
ஆட்டம் கண்டது

எங்கள் அரசியல் கட்சி

உண்மைப் போராளிகளின்
உதிரத்தால் உயிரூட்டப்பட்ட
உன்னதக் கட்சி - இன்று
ஊதாரிகளின் உறைவிடமாகிறது
வம்பு வசை பாடுவதும்
சதி வலைகள் பின்னுவதும்



தக்க தருணத்தில்
பாடம் புகட்டுவோம்
என்ற அரட்டல்கள்
அலுத்துப் புளுத்துப் போனவைகள்
அடுக்கடுக்காய் வரும் - இவர்கள்
அனைவருமே
அநீதி இழைப்பவர்கள்

பாவம் வாக்குப் போட்ட மக்கள்
ஒற்றுமை பற்றி
வார்த்தை ஜாலம் காட்டும்
இவர்கள்
ஒதுங்கியே நிற்கின்றனர்
ஆனால்,
நீங்கள் ஆடுகின்ற
சதுரங்கம்
எமது சமூகத்தை
நட்டாற்றில் விட்டு விடும்.

தெரிந்தும்
திருந்தாமல் இருப்பது ஏனோ?

சாய்ந்தமருதூர். எம்.எச். முஹம்மட் இர்பி

## மிகச் சிறிய இரு குர்ஆன்கள்

3.2 cm நீளமும் 2 cm அகலமுடைய இரு குர்ஆன்களையே இரு படங்களிலும் காண்கிறீர்கள்.



இவற்றில் முதலாவது குர்ஆன் பறகதெனிய சிங்கபுர கிராமத்தில் இல. 97 இல் வசிக்கும் சித்தீக் மௌலவியிடம் காணப்படுகின்றது.

இரண்டாவது குர்ஆன் பறகதெனிய பாடசாலை வீதி இல. 97ல் வசிக்கும் எம்.எல்.எம். நவாப் என்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இதை இவர் சிங்கள சகோதரர் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டதாக குறிப்பிடுகின்றார். இவ்வாறு



அவர் இக் குர்ஆனை வெளிநாடு சென்று வந்த தனது நண்பர் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டதாக கூறுகின்றார்.

அதியசமான எமது சொத்துக்கள் பாதுகாக்கப்படுவது கட்டாயமானதாகும்.

எம். றிஸ்கான் முஸ்தீன்
பரகஹதெனிய

---

அத்தியாயம் 15 — 47

குறுநாவல்

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

எஸ்.ஏ. கிரான்

'ஓக்கே சேர் பட் வன் திங்க்... ஹி.. மே...............'

'நோ ஒப்பினீயன் மிஸ்டர் கோர்டினேற்றர்! ப்ளீஸ் டூ இற்! முத்துமுகம்மத். இவர் தரும் ராஜினாமா கடிதத்தில் கையெழுத்திட்டு விடு. சரியா...'

'சசரி சேர்!'

முத்துமுகம்மதுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இனி நான் சேமனில்லையா... தலைவருக்கு பிடிக்கவில்லையா... அவரே போட்ட பிச்சை.. அவரே எடுத்துக் கொண்டார். ஆணையை மீற முடியாது பழக்கமில்லை. எனினும் நெய்னாரால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

'...அ..! சே..ர். அப்ப எங்குட முத்துமுகம்மது இனி சேமனில்லியா சேர்? அப்படியென்டா ஆரு சேமன்...? '
தலைவர் புன்னகைத்து -
'ஏன் உனக்கு விருப்பமா...?'
என்று நெய்னாரை ஊடுருவிப் பார்க்க. நெய்னார்.
'என்டல்லோ...
எனக்கொண்ணா சேர்!' -
பயந்து மறுத்தான்.
தலைவர் மறுபடி
புன்னகைத்து-

'மிஸ்டர் ஹுசைன்பாறுக்? நெய்னார்!! எனக்காக முத்துமுகம்மது மூன்று விரல்களை இழந்தவன்...'
'இற் இஸ் ஒன்லி லெப்ட்ஹேன்ட் சேர்!' என்றார் ஹுசைன்பாறுக் அழுக்காறுடன்.
'முத்துமுகம்மது ஒங்களுக்காக உசிரயும் உடுவான் சேர்!' என்றான் நெய்னார் பெருமையுடன்.
'..............................................'
முத்துமுகம்மது பேசவில்லை.
'யெஸ்! முத்துமுகம்மது இழந்த மூன்று விரல்களுக்கும் மூன்று பரிசுகள் தருவதாக தலைவர் அவனுக்கு வாக்குறுதியளித்திருந்தார். அவன் இழந்த முதல் விரல் சுட்டு விரல்! விலாசமில்லாத முத்துமுகம்மதை தென்கிழக்கே சுட்டுவிரல் நீட்டிச் சுட்டிக் காட்டுகிற மாதிரி ஒரு பரிசளித்தேன். சேர்மன்! முதற் பரிசு சேர்மன் ஓப் த பள்ளிமுனை'

'தி கிப்ற் இஸ் டூ மச் போர் ஹிம்!'
'மொதப் பரிசே கடும் பரிசி! சேர்!'

'முத்துமுகம்மது இழந்த இரண்டாவது விரல்.... பாம்பு விரல். அதற்காக. கண்டவர் பயப்படுமாறு பாம்பு போல ஒரு பரிசு அளிக்க இப்போது தலைமைத்துவம் தயாராக இருக்கிறது.....'

'சேர்...ஐ...திங்க்...இற்ஸ் ஓவர் கோல்ட் ஒன் ஹிஸ் ஹெட்...'
'என்ன சேர் அது? பாம்புக் கம்பனிக்கு தலவராக்கப் போறிங்களா கொறுக்காவ?'
'யெஸ் முத்துமுகம்மது! நாளையிலிருந்து நீ ஒரு எம்பி திகாமடுல்ல மாவட்டத்தின் இலங்கை இஸ்லாமியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். யா. முத்துமுகம்மது இஸ் எப்பொயின்டெட் அஸ் எ மெம்பர் ஓப் பார்ளிமென்ட்... போர் திகாமடுள்ள டிஸ்றிக்....'

இடிவெடுத்து விழுந்து ஓய்ந்தது போலிருந்தது. அறைக்குள் யாரும் பேசவில்லை. இணைப்பதிகாரி ஹுசைன்பாறுக் துள்ளி. மார்பை அழுத்தியபடி தடுமாறி... சுவரைப்பிடித்தபடி. எகிறிப்போய் விழுந்த தனது மூக்குக் கண்ணாடியை தேடிக் கொண்டிருந்தார்.




நெய்னார் தன் காதுகளை நம்பமுடியாமல் வாயைப் பிளந்து காற்றைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு தரையில் இருந்து விட்டான். முத்துமுகம்மது அதிசயமாக மிகத் தெம்புடன் தலைவரை வியப்புடன் பார்த்தான். தலைவரின் கனவு விழிகள் முத்துமுகம்மதை கருணையுடன் நோக்கின. திடீரென அவன் தலைவரின் கால்களில் தடாலென விழுந்தான்.
'...சே....ர்... ன்... நா.........?'

'மிஸ்டர் ஹுசைன் பாறுக்! வேர் ஆர் யூ .? ப்ளீஸ் ரெடி எ ப்ரெஸ் மீற்றிங் டுமோரோ... அன்ட் பிரிபெயா த நெஸஸரி அரேஞ்மென்டற் போர் ஓத் அட் த பார்ளிமென்ட் முத்துமுகம்மத். ஓக்கே.. ப்ளீஸ்... நெய்னார்... எங்க நெய்னார்.. ஏய் எழுந்திரு! பள்ளிமுனை மத்திய குழுவுக்கும். தாடி மாஸ்டருக்கும் டெலிபோனில் விஷயத்தை சொல்லி விடு... சரியா...

'...செ..செரி சேர்!'

(தொடரும்...)

---




முஸ்லிம் குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி. முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக தொகுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும். ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.
இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.



247

கச்சி முகம்மது நஸாறுதீன்
கா்பலா வீதி. புதிய காத்தான்குடி -06
பிறந்த திகதி - 15-03-1965
சம்பவம் இடம்பெற்ற இடமும்
திகதியும் -12.07.1990 ல் மட்டக்களப்பு அம்பலாந்துறை சந்தியில் வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

---

248

கலந்தர் லெப்பை - அப்துல் ஹக்கீம்
216 C, பாலத்தோப்பூர்.
தோப்பூர் -01
பிறந்த திகதி -23.05.1976
சம்பவம் இடம்பெற்ற இடமும்
திகதியும்- 17.04.2003ல் பாலத்தோப்பூரில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயம்

---



249

முகம்மது காசிம் உபைத்துல்லாஹ்
01ம் வட்டாரம். அறபாத் நகர்.
புல்மோட்டை.
பிறந்த திகதி - 18.09.1967
சம்பவம் இடம்பெற்ற இடமும்
திகதியும்- 17.01.1991 இல் இனம்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருகரங்களும் துண்டிக்கப்பட்டுள்ளது.

---

250

கயாத்து முகம்மது பௌசுல் அமீர்
47/ 02. அப்துல் ரஹுமான் வீதி.
மஞ்சந்தொடுவாய்.மட்டக்களப்பு.
பிறந்த திகதி - 12.04.1968
சம்பவம் இடம்பெற்ற இடமும்
திகதியும் -12.07.1990ல் மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்

---

251

கயாத்து முகம்மது றஊப்
47/02. அப்துல் றஹுமான் வீதி.
மஞ்சந்தொடுவாய்
மட்டக்களப்பு.
பிறந்த திகதி - 22.10.1971
சம்பவம் இடம்பெற்ற இடமும்
திகதியும் - 07.09.1990 ல் மட்டக்களப்பு நொச்சிமுனைக் கிராமத்தில் வைத்து இனம்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு மரணம்
மரண அத்தாட்சிப்பத்திர இல: - 2201

---



252

எஸ்.பதுறுதீன் முகம்மட்
88. நெசவு நிலைய வீதி. நிந்தவூர் - 06
பிறந்த திகதி - 01.03.1973
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும்- 30.03.1990 மன்னார். இலந்தமோட்டைப் பகுதியில் வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் குரல்
MUSLIM KURAL
'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்க'

# முஸ்லிம் சிவில் சமூகம் தெளிவும் விழிப்புமடைய வேண்டியது காலத்தின் கட்டாயம்!

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒவ்வொரு அரசியல் பேச்சுவார்த்தையின் போதும் முஸ்லிம் சமூகம் எந்தவகையிலும் கலந்தாலோசிக்கப்படாது இருப்பதையே நாம் தொடர்ந்தும் கண்டுவருகிறோம்! இதுவரை நடைபெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தைகளின் திரைகள் விலகும் தருணங்களிலெல்லாம் முஸ்லிம் சமூகம் கைவிடப்பட்டதும் கவனிக்கப்படாததுமான நிலையிலேயே உள்ளது.

1985 ஜனவரியில் தொடங்கிய திம்புப் பேச்சுவார்த்தை தொடக்கம், சமகாலத்தில் நடைபெற்று வருகின்ற பொதுக் கட்டமைப்பு பேச்சுவார்த்தைகள் வரை இதுதான்கதை! நாளையும் இந்நிலை தொடராது என்பதற்கான எந்தவிதமான "உத்தரவாதமும்" இல்லை. இந்த நிலை நமது அரசியல் தலைமைகளின் படுபலவீனமான அரசியல் போக்கையே நமக்கு தெளிவாகக் காட்டுகிறது.

1984 இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின்போது, மிக மோசமாக முஸ்லிம்கள் கைவிடப்பட்டதும், புறக்கணிக்கப்பட்டதுமான சூழலே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்திற்கும், அதனுடைய அரசியல் ஸ்தாபிதத்திற்கும் அடிப்படையாக இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் தலைமைகள், தமது சொந்த மக்களைப்பற்றி பேசாது, மௌனமாகவிருந்தபோது, இத்தகைய மௌனத்தை தகர்த்து முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் முன்வைப்பதற்கு, நமக்கான தனித்துவமான ஒரு அரசியல் இயக்கம் தேவை என்கிற நமது மக்களின் தனியாத எதிர்பார்ப்பினதும் உழைப்பினதும், அர்ப்பணத்தினதும் விளைவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றமாகும். இத்தகைய நமது மக்களின் உணர்வே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அசைக்க முடியாத அடித்தளமாகும்.

நமது மக்களின் உறுதியான ஆணையினால் நமக்கான தனித்துவமான அரசியல் இயக்கம் கட்டியெழுப்பப்பட்டது. அந்த இயக்கத்தின் வழிவந்தவர்கள் நீ முஸ்லிம்களின் தலைவனில்லை! நாங்கள்தான் முஸ்லிம்களின் தலைவன் என நிரூபிக்கும் வாய்ச்சவால்களுக்குள் காலத்தையோட்டி ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இப்போது ஒட்டிக்கொண்டு விட்டனர்! ஆனால் இவர்களில் யாருமே முஸ்லிம்களின் தலைவர்களாக தம்மை வரலாற்று வழியில் நிரூபிக்கவில்லை என்பதுதான் இவர்கள் நடாத்திய நாடகத்தின் சோக முடிவு! ஏனெனில், எந்த நோக்கத்திற்காக முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது என்பது இவர்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாக இருந்தது. இந்த நோக்கத்தையும் மக்களின் எதிர்பார்ப்பையும் பேசிப் பேசியே இன்று இவர்கள் குட்டி பூர்சுவாத் தலைவர்களாகி விட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களென பதவிகளில் வீற்றிருக்கின்றனர்.

எந்த இலக்கை முஸ்லிம் சமூகம் அடைய வேண்டுமென நமது மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்தார்களோ அந்த மக்களை கைவிட்டு இவர்களால் எப்படி இந்தப் பதவிகளில் மட்டும் ஒட்டிக் கொண்டிருக்க முடிகிறது? மக்களின் தலைவர்கள் என்பது அமைச்சர்களாக இருப்பது அல்ல! மக்களுக்காகக் குரல் எழுப்புவதும், அம்மக்களுக்காக விட்டுக்கொடாது போராடுவதும், மக்களின் நலனில் அல்லாஹ்வுக்கு விருப்பான வழியில் மரணிக்கத் தயாராக இருப்பதுமேயாகும்!

2000 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் ஏற்பட்டு 2002 பெப்ரவரியில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

* புரிந்துணர்வு ஒப்பந்தம் முஸ்லிம்கள் பற்றி என்ன சொல்கிறது?
* நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்களின் நிலை எப்படி இருந்தது?
* பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோதே முஸ்லிம்களுக்கு என்ன நடந்தது?
* ரணிலின் நிலைப்பாடு என்ன?
* சந்திரிகாவின் நிலைப்பாடு என்ன?
* இடைக்கால சபை பேச்சுவந்தபோது முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்ன செய்தார்கள்?

மேற்கூறப்பட்டவைகள் நேற்று நிகழ்ந்தவைகள். இன்று இலங்கை அரசியல் அரங்கில் பொதுக்கட்டமைப்பு விவகாரம் முக்கிய அரசியல் பேசு பொருளாக மாறியுள்ளது. இந்த விடயத்தில் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளின் நிலைப்பாடு என்ன? இப்படியே இருந்தால்... நமது மக்களின் நிலை?

இத்தகைய நிலையில் முஸ்லிம் சிவில் சமூகத்தின் அரசியல் விழிப்பும் அதனுடைய போராட்டமும் மிக முக்கியத்துவமடைகிறது. முஸ்லிம் சிவில் சமூகம் விழித்துக் கொண்டால் மட்டுமே நாம் பேச்சுவார்த்தை அரங்கிலும் நமது இருப்பிலும் உறுதியாகக் காலூன்ற முடியும்!

நமது தலைவர்களுக்கு அவர்களுக்கிடையிலான சண்டைகளைத் தீர்க்கவே நேரம் போதவில்லை. அவர்களை நாம் தொந்தரவு செய்ய வேண்டாம்! மக்களாகிய நாம், நமது அரசியல் பணியை முன்னெடுப்போம்! இதனைத் தவிர வேறு வழியிருப்பதாக எமக்குப்படவில்லை!

தோழமையுடன் - பிரதம ஆசிரியர்

தொடர்புகளுக்கு -
Chief Editor - Muslim Kural
119/15, Kittampahuwa Road, Viviyan Gunawardena
Mawatha Wellampitiya - Sri Lanka
Tel : 077 3131627 Fax : 0114 618979
E-mail - muslimkuralsl@yahoo.com

# புத்தள முஸ்லிம்கள் வாழ்வில் வடமாகாண முஸ்லிம்களின் இடப் பெயர்வு!

வடமாகாண முஸ்லிம்கள் புலிகளினால் இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டு 15 வருடங்கள் ஆகிவிட்டது. வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் ஒரு முக்கிய பிரச்சினையாகக் கொள்ளப்படும் அதேவேளை, வடமாகாண முஸ்லிம்களை உள்வாங்கி தமது மடியில் தஞ்சம் கொடுத்த புத்தள முஸ்லிம்களின் வாழ்வு இன்று பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஒரு பிரதான பிரச்சினையின் பக்க விளைவாக இன்னுமொரு பிரதான பிரச்சினை நமது சமூக அகத்திற்குள் தலை தூக்கியுள்ளது. இந்த உண்மையை நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் புத்தளம் தொகுதி முஸ்லிம்கள் சார்பாகக் கையளிக்கப்பட்ட மகஜர் தெளிவாகக் காட்டுகிறது! அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை நமது சமூக ஆர்வலர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூட்டத்தை 15 வருடங்களாகச் சுமந்து பிரச்சினைகளை எதிர்கொள்ளமுடியாமல் இருக்கும் புத்தளம் முஸ்லிம்களின் துயரங்களை கவனத்திற் கொள்ளாது இருப்பது துயரம் தருவதாக உள்ளது. வடமாகாண முஸ்லிம்களின் வருகையால் சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் புத்தளம் முஸ்லிம்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் விடயத்தில் புத்தளம் மிக முக்கியத்துவமுடைய ஒரு பிரதேசமாக இன்று மாறிவிட்டது. வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கற்பிட்டி, முந்தல், புத்தளம், வண்ணாத்திவில்லு ஆகிய நான்கு பெரும்பான்மை முஸ்லிம் பிரதேச செயலகங்களில் வாழ்ந்து வருகின்றனர். 15 வருடகாலமான வாழ்வில் வடமாகாண முஸ்லிம்களுக்கும் புத்தளம் முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆனால் வளப்பற்றாக்குறை காரணமாக இரு சாரரிடையேயும் சில பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

ஏலவே புத்தளத்தில் முஸ்லிம்கள் வாழ்வதற்கே நிலப்பற்றாக்குறை இருந்து வந்தது. வடமாகாண முஸ்லிம்களின் வருகையால் நிலத்தட்டுப்பாட்டை புத்தளம் முஸ்லிம்கள் பெருமளவில் எதிர்கொள்கின்றனர். கல்வி வளத்தைப் பகிர்ந்து கொள்வதில் பெருமளவு சிக்கல் காணப்படுகிறது. புத்தள முஸ்லிம்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. அரச தொழில் வாய்ப்பிலும் இதே நிலைமைதான் காணப்படுகிறது. புத்தளம் முஸ்லிம்கள் இன்று நிலம், கல்வி, அரச தொழில் வாய்ப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். மற்றும் கலாசார தளத்திலும் வடமாகாண முஸ்லிம்களின் வருகையால் புத்தளம் முஸ்லிம்களின் வாழ்வில் பெரும் தாக்கம் நிகழ்ந்துள்ளது. போக்குவரத்து, பாதை என்பன சனநெருக்கடியால் பாதிப்படைந்துள்ளன. வைத்தியசாலைகளில் நோயாளர்கள் நிரம்பிக் காணப்படுகின்றனர்.


- எஸ்.ஆர்.எம்.எம். முஹ்சி -
புத்தளம்.

வடமாகாண முஸ்லிம்களுக்கு சேவையாற்றுவதற்காக புத்தளம், கற்பிட்டி, முந்தல், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகங்கள், அரச நிறுவனங்கள் தயார்படுத்தப்படவில்லை. இந் நிறுவனங்களின் சேவை இருமடங்காக எதிர்பார்க்கப்படும் அதேவேளை, இந் நிறுவனங்களில் வளங்கள் அதிகரிக்கப்படவில்லை. இதனால் அரச சேவையைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகள் தோன்றியுள்ளன என அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வடமாகாண முஸ்லிம்களை இருகரம் நீட்டி மனங்கோணாது தமது மடிகளில் வாழ்வளித்த புத்தளம் முஸ்லிம்கள், தமது முன்மாதிரியான சகோதரத்துவ உணர்வில் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினையைத் தீர்ப்பது முஸ்லிம் சமூக சக்திகளின் இன்றியமையாத பணியாகும். இந்த விடயத்தில் நமது கவனத்தை அதிகம் திருப்ப வேண்டி உள்ளது.

# சிவராமின் படுகொலை!



தர்மரத்தினம் சிவராம் மீதான படுகொலை: நீண்டகாலமான சிங்கள-தமிழ்த்தேசங்களுக்கிடையிலான முரண்பாட்டின் விளைவு என்பது வெட்ட வெளிச்சமானது. கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்கின்ற சூழ்நிலையை! அதற்கான மனோபாவத்தை சாத்தியப்படுத்த வேண்டிய தேவை உடனடியாக இலங்கையின் அனைத்து சமூகங்களின் முன்னுள்ள பிரதான பணியாக இன்று நிலைபெற்றுள்ளதாக நாம் கருதுகிறோம்! கருத்துச் சுதந்திர உரிமைக்கு எதிராக எழுந்துள்ள நிலைமையை எதிர்கொள்வது அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் முன்னுள்ள பிரதான சவாலாகும்.

தொடரும் படுகொலைகள் மிகவும் மோசமான சூழலுக்குள் இலங்கை மக்களை தள்ளிவருகிறது. ஜனநாயக கருத்து சுதந்திர உரிமைகளுக்காக போராடுகின்ற: கருத்துக்களை வாழவைக்க குரல் எழுப்ப வேண்டிய அவசியத்தேவை சமகாலத்தில் இலங்கை சமூக அரசியலில் ஏற்பட்டுள்ளது. கொலைகளின் ஊடாக யாருமே மகிழ்ச்சியடைய முடியாது! ஊடக உலகமும் சிந்தனை உலகமும் சிவராமின் மரணத்தினாலும்; தொடரும் கொலைகளாலும் மிக மோசமாக அதிருப்தியடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

வெள்ளி இரவு நிகழ்ந்த சிவராமின் மரணம் ஒரு தனி மனிதனின் மரணம் என்ற எல்லையையும் தாண்டி: தேசிய இனத்துவ அரசியலில் பல்வேறு பரிமாணத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய் வலிமை வாய்ந்ததாகும். இப்படுகொலையின் விளைவு தேசிய இன நெருக்கடியை மேலும் கூர்மைப்படுத்தி அதிகரிக்கவே வழிவகுத்துள்ளதை அரசாங்கமும், அனைத்து சக்திகளும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்!

பாதுஷா

இப்பத்திரிகை 119/15, கெத்தம்பகுவ வீதியில் அமைந்துள்ள, முஸ்லிம் குரல் பப்ளிகேஷன் அன்ட் பிரின்டர்ஸ் நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org